பக்கங்கள்: பத்து

stered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 03 ஞாயிற்றுக்கிழமை (16-05-2004) தொலைபேசி - 2223378 ஒலி 149

திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
♦ விரைவானது ♦ பாதுகாப்பானது ♦ நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக
துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
வங்கிக்கணக்கு அவசியமில்லை
நீடிக்கப்பட்ட சேவை நேரம்
365 நாள் சேவை
10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 222 7310
021 222 7555
021 222 7560
Fax 021 222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# இந்தியாவின் புதிய பிரதமராக இத்தாலியப் பெண் சோனியா

## நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு



(டெல்லி)

இந்தியாவின் புதிய பிரதமராக காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் மனைவியான சோனியா காந்தி தெரிவுசெய்யப் பட்டுள்ளார். நேற்று நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் எம்.பிக்கள் கூட்டத்தில் சோனியா காந்தி ஏக மனதாக பிரதமராகத் தெரிவு செய் யப்பட்டார்.

காங்கிரஸ் பாராளுமன்றக் குழுக்கூட்டம் பாராளுமன்ற மைய அரங்கில் நடைபெற்றது. மன்மோகன சிங் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தேர்தலில் வெற்றி பெற்ற 145 எம்.பிக்களும் கலந்து கொண்டனர். சோனியா பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதை மன் மோகன் சிங் அறிவித்தார்.

பாராளுமன்ற தேர்தலில் காங் கிரஸ் கட்சிக்கு 145 இடங்கள் கிடைத்துள்ளன.

அதன்தலைமையில் அமைந் துள்ள கூட்டணி மொத்தம் 217 இங களைக் கைப்பற்றியுள்ளது. இதன் அடிப்படையில அதிக இடங்களைப் பிடித்த கூட்டணி என்ற அந்தஸ்து டன் ஆட்சியமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் ஆட்சி அமைக்க 272 எம்.பிக்கள் ஆதரவு தேவை. காங்கிரஸ் கூட்டணிக்கு அந்தளவுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இருந்த போதும் சோனியா, கூட்டணி கட்சித் தலை வர்களுடனும் மதச்சார்பற்ற ஆதர வுக்கட்சி தலைவர்களுடனும் ஆலோசனை நடத்துகிறார். இன்று மாலை 5 மணிக்கு ஜனாதிபதி அப்துல்கலாமை சோனியா சந்திப் பார் என்று டெல்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

தன்னை ஆட்சி அமைக்க அழைக்கும்படி சோனியா கோரிக்கை விடுப்பார். அதையேற்று ஜனாதிபதி இன்று அழைப்பு விடுப்பார் என்று தெரி

(10ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் சமாதான முயற்சிக்கு காங்கிரஸ் அரசு உதவ வேண்டும்

## கருணாநிதியை சந்தித்து அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை

(நமது நிருபர்)

**இந்தியாவில் புதிய ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ள சோனியா காந்தி தலைமையிலான அரசாங்கம், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவ திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி மேற்கொள்ள வேண்டுமென்று மலையக மக்கள் முன் னணித் தலைவரும் எம்.பியுமான பெ.சந்திரசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தமிழ் நாட்டில் திராவிட முன் னேற்றக் கழகத்துடன் கூட்டுச் சேர்த்து முழுத்தொகுதிகளையும் தி.மு.க-காங்கிரஸ் கூட்டு முன்னணி கைப்பற்றிய நிலையில், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தமிழ் நாடு சென்று மு.கருணாநிதியிடம் இவ் வேண்டு கோளை விடுத்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தலை மையிலான தூதுக் குழுவொன்று நேற்று தமிழ் நாடு சென்று திரா விட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியைச் சந்தித்தது.

தி.மு.க-காங்கிரஸ் கூட்டணிக எில் இலங்கைத் தமிழ் மக்களின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரியநேந்திரன் எம்.பி. 18ந் திகதி சத்தியப் பிரமாணம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான கிங்ஸ்லி இராசநாயகம் தமது பதவியை இராஜிநாமாச் செய்ததைத் தொடர்ந்து அவரது இடத்திற்கு பாக்கியராஜா அரியநேந்திரன் தெரிவு செய்யப் பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப் பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரி வித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்டினா றொக்கா திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

திருகோணமலை மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 18 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதிவாய்ந்த மீன்பிடித் தொழில் உபகரணங்களை அமெரிக்க அர சின் தெற்காசிய விவகாரங்களுக் குப் பொறுப்பான இராஜாங்கப் உதவிச் செயலாளர் திருமதி கிறிஸ்டினா றொக்கா நேற்றுக் கையளித்துள்ளார்.

இலங்கைக்க வருகை தந்திருந்த கிறிஸ்டினா றொக்கா நேற்றுத் திரு

(10ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் கிறிஸ்டினா றொக்கா நேற்றைய தினம் திருமலைக்கு விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட படம்.

# இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படமாட்டாது

## சம்பந்தன் எம்.பி. நம்பிக்கை

(நமது நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சி னைத் தீர்வுக்கு சமாதானப் பேச்சு வார்த்தைமூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் ஏற்பட மாட்டாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் பி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் மூலம் காங்கிரஸ் ஆட்சியை அமைக்க இருப்பதால் இலங்கை குறித்த இந்தியாவின் கொள்கையிலும் மாற்றம ஏற்படுமா என்று கேட்ட போதே இரா. சம்பந்தன் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர்அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான உண்மையான தார்ப் பரியங்களை புதிய அரசு புரிந்தி ருக்கும் சமீபகாலமாக இந்தியாவுக்கும இலங்கைத் தமிழர்களுக்குமான இடைவெளி அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. எதிர்வரும் காலங் களில் அந்த இடைவெளி குறைவ தற்கும், இந்தியா தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் தூதுவர் யசூசி அகாஷி தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்

(கிளிநொச்சி)

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கிளி நொச்சிக்கு வருகைதந்து விடுத லைப புலிகளுடன் சமாதான முயற் சிகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் முற் பகல் 11 மணிக்கு சமாதானச் செயல கத்தில் சந்திப்பு நடைபெறும்.

சந்திப்பில் சமாதான முயற்சி யின் நகர்வுகள் குறித்தும், சமாதான முயற்சி குறிப்பிடத்தக்களவு முன் னேற்றத்தைக் காணும் பட்சத்தில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவியை வழங்கும் நடைமுறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# கர்நாடகத்தில் அரசு அமைப்பது யார்? தேவகௌடா கட்சியுடன் சேர முயற்சி

கர்நாடக மாநிலத்தில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் முன்னாள் பிரதமர் தேவகௌடா தலைமையிலான மதச்சார்பற்ற ஜனதா தளத்துடன் சேர்ந்து ஆட்சியமைப்பதற்கான முயற்சியில் காங்கிரஸூம், பா.ஜ.கட்சியும் தீவிரமாக இறங்கியுள்ளன.

இதனால் புதிய அரசு அமைப்பதில் கர்நாடகத்தில் இழுபறி நீடிக்கிறது. கர்நாடக சட்டப் பேரவையில் மொத்தம் உள்ள இடங்கள் 274. இதில் பாரதிய ஜனதாக் கூட்டணிக்கு 79, காங்கிரஸூக்கு 65 மற்றும் தேவகௌடா தலைமையிலான மதச் சார்பற்ற ஜனதாதளத்திற்கு 58 இடங்கள் கிடைத்துள்ளன. மற்றையன உதிரிக்கட்சிகளுககு. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் தேவகௌடா ஆதரிக்கும் கட்சியே கர்நாடகத்தில் ஆட்சியமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தேவகௌடா கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கத் தயார் என்று அம்மாநில காங்கிரஸ் தலைவர் ஜனார்த்தன பூஜாரி கூறியுள்ளார்.

இந்நிலையில் ஆட்சியமைப்பதில் யாருக்கு ஆதரவு என்பது குறித்து தேவகௌடா கட்சி நிர்வாகிகளுடன் நேற்று முன்தினம் பெங்களூரில் விவாதித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் புதிய ஆட்சியமைக்க யாரை ஆதரிப்பது என்று இன்னும் இரண்டு தினங்களில் முடிவு செய்யப்படும் என்றார்.

இதனைத் தொடர்ந்து தமது கட்சியின் தேசியத் தலைவர்கள் மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக தேவகௌடா டில்லி புறப்பட்டுச் சென்றார்.

தேவகௌடா கட்சியுடன் கூட்டணி அமைக்கும் முயற்சியில் பா.ஜ.கவும் தீவிரமாகவுள்ளதாக அதன் மாநிலத் தலைவர் அனந்த குமார் கூறியுள்ளார். (து)



நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி தோல்வியடைந்தது. கருத்துக் கணிப்புக்களைப் பொய்யாக்கி காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் தனது இல்லத்துக்கு வெளியே குழுமியிருந்த காங்கிரஸ் தொண்டர்களுக்கு நன்றி தெரிவிக்கும் சோனியாகாந்தி.

# தமிழ் மக்களின் கோபாவேசமான தீர்ப்பு

மக்களவைத் தேர்தல் முடிவு மத்தியில் பா.ஜ.க ஆட்சிக்கும், மாநிலத்தில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராக தமிழக மக்கள் அளித்த கோபாவேசமான தீர்ப்பு என்று மார்க்ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்



மாநிலச் செயற்குழுக் கூட்டம் தெரிவித்துள்ளது.

இத் தீர்ப்பு மத்திய அரசுக்கு எதிரான தீர்ப்புத்தான்; மாநில அரசுக்கு எதிரானது அல்ல என்று முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கை அப்பட்டமான கேலிக்கூத்தாகும் என்று கூறும் தீர்மானம் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் சென்னையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

ஜெயலலிதாவின் இந்த அறிக்கை மக்கள் தீர்ப்பையும் அவர் மதிக்கத் தயார் இல்லை என்ற ஆணவப்போக்கைக் காட்டுவதாக மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என்.வரதராஜன் செய்தியாளர்களிடம் கூறினார். (து)

# வெற்றிபெற உழைத்தவர்களுக்கு கருணாநிதி பாராட்டு

(சென்னை)

மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி வென்று சரித்




திர சாதனை படைத்ததற்குக் காரணமான சகலருக்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதி நன்றி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணி 40தொகுதிகளில் நின்று, 40 தொகுதிகளிலும் வென்று நாடு இதுவரை கண்டிராத வரலாறு படைத்துள்ளதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்று வெற்றிக்கு ஓய்வின்றி உழைத்த கூட்டணிச் செயல் வீரர்களின் வியர்வைத் துளிகள் காரணமென்று கருணாநிதி வர்ணித்துள்ளார்.

அனைத்துப் பிரிவு மக்களின் அல்லல், அவர்கள் சந்தித்த அடக்குமுறை, ஏதேச்சாதிகாரம் போன்ற எல்லாவற்றையும் சமாளித்து சாதாரண, சாமான்ய, நடுத்தர மக்கள் படைத்திட்ட சரித்திரம் தான் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வெற்றியென்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (து)



14 ஆவது மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் வெளியாகும் முடிவுகளைத் தெரிந்து கொள்வதில் பொது மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர். அதே போல் தொலைக்காட்சிகளும் இணைய தளங்களும் முடிவுகளை முந்திக்கொண்டு வெளியிட்டன. புதுடில்லியிலுள்ள சாஸ்திரி பவன் வளாகத்தில் தேர்தல் முடிவுகளை வெளியிட வைக்கப்பட்டிருந்த பெரிய திரையில் முடிவுகளைக் காணும் குடிமக்கள்.

# ஜெயலலிதா அரசுக்கு தமிழக மக்கள் அளித்த தீர்ப்பு

(சென்னை)

மக்களவைத் தேர்தலில் தமிழ் நாட்டில் முதலமைச்சர் ஜெய



லலிதாவுக்கு சரியான பாடம் கற்பிக்கும் வகையில் மக்கள் அளித்துள்ள தீர்ப்பு அவரது அரசுக்கு எதிரான இடைக்கால வாக்கெடுப்பாகவே கருதப்படவேண்டும் என்று ம.தி.மு.க.வின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் தெரிவித்துள்ளது.

இதனால் முதலமைச்சராக நீடிப்பதற்குரிய தார்மீக உரிமையையும், தகுதியையும் ஜெயலலிதா இழந்து விட்டதால் அவர் பதவிவிலகுவதோடு அவரது அமைச்சரவையும் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தும் தீர்மானம் உள்ளிட்ட நாலு தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் பொதுச் செயலாளர் வை.கோ மத்தியில் புதிதாகப் பதவியேற்க இருக்கும் காங்கிரஸ் கூட்டணி அரசு சர்ச்சைக்குரிய பொடாச் சட்டத்தை இரத்துச செய்யுமென்று நம்பிக்கை தெரிவித்தார். (து)

## இந்தியச் செய்திகள்

# மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் சோனியா பிறப்பு பற்றி பா.ஜ.க.

வெளிநாட்டில் பிறந்தவர்கள் நாட்டின் உயர் பதவிகளை வகிக்கக் கூடாது என்பதில் பா.ஜ.க. உறுதியாக உள்ளது என்று அக் கட்சியின் தலைவர் வெங்கைய நாயுடு கூறியிருக்கிறார்.

புதுடில்லியில் நடைபெற்ற கட்சியின் ஆட்சி மன்றக் கூட்டத்தின்பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர் பா.ஜ.க.தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் தோல்விக்கு எவரையும் பலிக்கடா ஆக்க விரும்பவில்லை என்றார்.

புதிய அரசு பதவி ஏற்பதற்கு முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது முடிவு செய்யப்படுமென்றும் அவர் கூறினார்.

பிரதமர் வாஜ்பாய் இல்லத்தில் நடந்த கட்சியின் மத்திய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தேர்தல் முடிவுகள் பற்றி விவாதிக்கப்பட்டதாகக் கூறிய வெங்கைய நாயுடு, தேர்தல் முடிவுகள் ஆழமாக அலசி ஆராயப்பட வேண்டுமென்று திர்மானிக்கப் பட்டதாகத் தெரிவித்தார்.

முன்னதாகப் பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற பா.ஜ.க.உயர் நிலைக் குழுக் கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாய், துணைப்பிரதமர் அத்வானி, மத்திய அமைச்சர்கள் முரளி மனோகர்ஜோஜி, வெங்கையநாயுடு ஆகியோர் கலந்து கொண்டார்கள். (கு)

# தி.மு.க. கூட்டணி அரசில் பங்கு கொள்ள வேண்டும்

## முன்னாள் பிரதமர் வி.பி.சிங் வேண்கோள்

(புதுடில்லி)

மத்தியில் காங்கிரஸ் தலைமையில் அரசு அமைக்கும் முயற்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்ஜஸிங் சுர்ஜித் இது தொடர்பாக சமாஜ்வாதக் கட்சித் தலைவர் முலாயம்சிங் யாதவுடனும் தேசியவாதக் காங்கிரஸ் கட்சி தலைவர் சரத்பவாருடனும் ஆலோசனை நடத்தினார்.

இதற்கிடையே பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விலக்கிக் கொள்வதற்கான கொள்கையைப் புதிய அரசு கைவிட வேண்டும் என்று இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

மார்க்ஸிஸ மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் புதுடில்லியில் சந்தித்துப் பேசிய பின். ஹர்ஜஸிங் சுர்ஜிக் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.வி. பரதன் ஆகியோர் இலாபமீட்டும் பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளோம் என்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு இழைத்த இது போன்ற தவறுகள் அனைத்தையும் புதிய அரசு சரிசெய்யவேண்டும் என்றும் கூறினார்கள்.

புதிய கூட்டணி அரசின் பொருளாதாரக் கொள்கை என்னவென்று தெரிந்த பிறகே அதில் சேருவது பற்றி முடிவெடுக்க முடியும் என்று பரதன் கூறினார்.

இந் நிலையில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங், மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்ஜஸிங் சுர்ஜித்துடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஆசின் ஸ்கிாக் தன்மையைக் கருதி மத்தியில் அமையவிருக்கும் புதிய அரசில் இடதுசாரிக் கட்சிகள் சேரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

தி.மு.க.தலைவர் கருணாநிதியுடனும் தான் தொலைபேசியில் பேசியதாகவும், அவர் டில்லி வரும் போது மீண்டும் அவருடன் பேசி கூட்டணி அரசில் பங்கு கொள்ளுமாறு கூறப்போவதாகவும் வி.பி.சிங் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியை ஆட்சியமைக்கும்படி மக்கள் தீர்ப்பளித்துள்ளதால், கட்சியின் தலைவர் யார் என்பதை வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களே முடிவு செய்யவேண்டும்மே தவிர, வெளிச் சக்திகள் தலையிடுவது தவறு என்றார் வி.பி.சிங்.

காங்கிரஸ் கட்சியும் சரியான பொருளாதாரத் திட்டத்தை வெளியிடவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (கு)

# ஊர்காவற்றுறை கோட்டையடிக் கிராமத்தின் குறைகள் நீங்குமா...?

ஊர்த் தரிசனம் 2

ஊர்காவற்றுறை நகரப் பகுதியிலிருந்து இரண்டரைக் கிலோமீற்றர் தூரத்தில் பருத்தியடைப்பு கிராம அலுவலகர் பிரிவில் **கோட்டையடிக் கிராமம்** உள்ளது. இது இவ்வாண்டின் ஆரம்பத்தில் 70 குடும்பங்களுக்கு தலா ஒரு பரப்பு முதல் ஒன்றரைப் பரப்பு வரை அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் மூலம் வழித்தோன்றிய கிராமமே இது. இது வன்னிப் பகுதியில் இருந்து மீளக்குடியமர வந்த குடும்பங்களுக்கு இக்காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. தற்போது இங்கு 61 குடும்பங்கள் ஓலைக் குடிசையிலேயே வாழ்க்கையை நடத்தி வருகின்றன.

"நாங்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றியே இங்கு வாழ்ந்து வருகிறோம்'' என இக்கிராமவாசியான ந.சிவபாலன் தெரிவித்தார்.

இக்கிராமத்தில் தற்போது 61 குடும்பங்களைச் சேர்ந்த 102 ஆண்கள், 112 பெண்கள் என மொத்தமாக 214 பேர் வசித்து வருகின்றனர். இவர்களில் 9 பேர் விதவைகள் ஆவார் என ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத் தகவல் தெரிவிக்கின்றது. இக் கிராமத்தில் 90 வீதமானவர்கள் மீன்பிடித் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். அத்துடன் கிடுகு பின்னுதலையும் குடிசைக் கைத்தொழிலாய் விதவைக் குடும்பப் பெண்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

கோட்டையடிக் கிராமக் குடிசைகள்.





ஆரம்பத்தில் இவர்களை மீளக்குடியமர்த்தும் முகமாய், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) 50 பேருக்கு ஓலைக் குடிசை களை அமைத்துக் கொடுத்ததுடன், தற்காலிக மலசலகூடங்கள் இரு தொகுதியினையும் அமைத்துக் கொடுத்திருந்தது. இது தொர்டர்பாக இக் கிராமவாசியான க.சண்முகநாதன் கூறுகையிலே,

இவ்வளவு காலமும் இரண்டு தொகுதிகளாய்க் காணப்படும் ஆறு மலசலகூடங்களைப் பெண்கள் மட்டுமே பாவித்து வருகின்றார்கள். ஆண்கள் அனைவரும் காலைக் கடன்களைக் கழிப்பதற்கு குடிசைக்கு அருகிலுள்ள பற்றை மறைவினையே பாவித்து வருகின்றனர் எனக் கூறுகின்றார்.

எனவே தான் இக்கிராம மக்களின் சுகாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு மேலதிக மலசலகூடங்களை உடனும் அமைத்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் நோய்க் காவிகளினால் பரப்பப்படும் தொற்று நோய்க்கு மக்கள் உள்ளாக்கப்படுவர் என்பது திண்ணமே.

## வெளிநாட்டு உதவிகள்



கிராமத்தில் உள்ள தற்காலிக மலசல கூடத்தொகுதி.

"தற்போது கோட்டையடிக் கிராமத்தில் உள்ள மீனவக் குடும்பங்களின் நலன் கருதி கடற்றொழில் நீரியல்துறை அமைச்சினால் சுமார் 50 குடும்பங்களுக்கு, தலா இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான வீடு கட்டும் பொருட்கள் வழங்கப்பட்டது'' என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜெ.எக்ஸ். செல்வநாயகம் தெரிவித்தார். மேலும் இவர் தெரிவிக்கையில் , இக்குடியிருப்பில் வசிக்கும் 50 குடும்பங்களுக்கு மணல், கல என்பனவற்றையும், தலா 6,890 ரூபா பெறுமதியான சிமெந்தினையும் "யு.என்.எச்.சி.ஆர்'' நிறுவனத்தினர், "போரூட்'' நிறுவனத்தின் ஊடாக வழங்கியுள்ளனர்'' எனவும் கூறினார். இத்துடன் இக்கிராம மக்களுள் 30 பேருக்கு மீள்குடியமர்ந்தோர் கொடுப்பனவாகத் தலா 25,000 ரூபாவும், மேலும் 30 பேருக்குத் தலா 15,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கிடைத்த உதவிகள் மூலம், குடிசைகளை அரை நிரந்தர வீடுகளாக மாற்றுவதற்கு நடவடிக்கையினைப் பலர் மேற்கொண்டு வருகின்றார்கள். அதேவேளை இக்குறிப்பிட்ட உதவியினைக் கொண்டு அரை நிரந்தர வீட்டினைக் கட்டியெழுப்பக் கூடிய நிலையில் இவர்கள் அனைவரும் இல்லை என்பதும் கண்கூடு. இக்கிராமவாசியான ந.சிவபாலன் கூறுகையில், "அரை நிரந்தர வீடுகளை அமைப்பதற்குக் கிடைக்கும் உதவிகளைக் கொண்டு, கூலியினைக் கொடுத்து வீடு கட்டும் நிலையில் இம்மக்கள் இல்லை" எனத் தெரிவித்தார்.

கோட்டையடி கிராமத்திற்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் இரண்டு கிணறுகளைப் புனரமைத்துக் கொடுத்துள்ளது. இக்கிணற்றில் ஒன்றைக் குளிப்பதற்கும், மற்றயதைக் குடிப்பதற்குத் தவிர்த்த ஏனைய கருமங்களைச் செய்யவும் பயன்படுத்தி வருகின்றனர். இதன் அடிப்படையில் குடிநீர் வசதியுடன் கூடிய பொதுக் கிணறுகளையும் புனரமைக்கப்பட வேண்டும் என்பது முக்கிய விடயமாகின்றது. இது தொடர்பாக கிராமவாசி ஒருவரைக் கேட்டபோது, "இதேவேளை இங்கு நல்ல குடிநீர் வசதிகள் இல்லை. குடிநீரைப் பெறுவதற்கு ஒரு கிலோமீற்றர் தூரம் வரை சென்று குழாய் நீரைப் பெற்று வருகின்றோம். இதற்காக எமது வசதி கருதியாவது, குழாய் மூலம் குடிநீரைப் பெறும் வசதியைப் பெற்றுத்தர வேண்டும்" எனக் அக்குடிமகன் கூறினார்.

கோட்டையடிக் கிராமத்திற்கு ஒழுங்கான வீதிகளும் அமைக்கப்படவில்லை. ஒரு குடிசையில் இருந்து இன்னொரு குடிசைக்குச் செல்வதானால் பற்றைகளுக்கிடையேயான ஒற்றையடிப்பாதையையே பயன்படுத்தப்படுகின்றது. இக்குடியிருப்பிற்கு வீதிக்கென்று குறிப்பிட்ட அளவு காணித்துண்டு காணப்பட்ட போதும், அவை பற்றைகளாலேயே மூடிக்கிடக்கின்றது. இந்நிலைதான என்று மாறும்...? என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

## கல்வியும் தொழிலும்



குறுகிய பாதையூடாக பயணிக்கும் பொது மக்கள்.

கிராமவாசிகளின் ஜீவனோபாயத் தொழிலான மீன்பிடித்தலையே பல சவால்களின் மத்தியில் மேற்கொள்ள வேண்டிக் கடைப்பட்டுள்ளனர். காரணம் குடிசைக்கண்மையில் உள்ள கடலில் மீன்பிடிக்க முடியாது.அதுபாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட கடற்பிரதேசம் ஆகும். "நாம் கடற்றொழிலுக்காக இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கரம்பொன் கண்ணகியம்மன் கோவில் துறைமுகத்தினையே பாவித்து

தரிசனம்
**ஞா.செந்தமிழ்ச்செல்வன்**
செய்தியாளர், ஊர்காவற்றுறை

வருகின்றோம் இதனால் பல கஷ்டங்களையே அனுபவிக்கின்றோம். எங்கள் குடிசைக்கண்மையில் உள்ள கடலில் மீன்பிடிக்க அனுமதியை இவர்கள் தான் தர வேண்டும்'' என அக்குடியிருப்பில் வாழும் மீனவர் ஒருவர் தெரிவித்தார். "அத்துடன் எமது கிராமத்தில் பத்துப் பேரிடமே சிறிய படகுகள் உள்ளன. ஒரு படகில் இருவர் அல்லது மூவர் இணைந்து தொழில் செய்கின்றோம். நாளாந்தம் கிடைக்கின்ற வருமானத்தில் குறிப்பிட்ட

**இவ்வளவு காலமும் இரண்டு தொகுதிகளாய்க் காணப்படும் ஆறு மலசலகூடங்களைப் பெண்கள் மட்டுமே பாவித்து வருகின்றார்கள். ஆண்கள் அனைவரும் காலைக் கடன்களைக் கழிப்பதற்கு குடி சைக்கு அருகிலுள்ள பற்றை மறைவினையே பாவித்து வருகின்றனர்.**

ஒரு தொகையினைப் படகுக்காக ஒதுக்கிவிட்டு மீதியினைத் தான் தொழிலுக்காகச் செலவு செய்கின்றோம். அதனால் எமது வருமானத்தினை குறிப்பிட்டுச் சொல்ல முடியாதுள்ளது'' என அவர் மேலும தெரிவித்தார்.

இவர்களின் இப்படியான கருத்துப் பரிமாற்றத்தினை வைத்துப் பார்க்கும்போது, இம் மீனவர்களின் தொழிற் பக்கத்தினையும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தவே வேண்டியுள்ளது.

இக்குடியிருப்பில் உள்ள சிறுவர்கள் 15 பேர் ஒரு கிலோமீற்றர் தூரம் வரைசென்று கதிரேசன் முன்பள்ளியில் கல்வி பயில்கின்றார்கள். இங்கு பாலர் களரிகள் எதுவும் இல்லை. அத்துடன் தரம் ஒன்றிற்கு மேல் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் சுமார் இரண்டு கிலோமீற்றர் வரையான தூரம் சென்று பாடசாலையொன்றிலேயே கல்வியை மேற்கொள்கின்றனர். இதன் அடிப் படையில் இக்குடியிருப்புக்கு ஒரு பாலர் களரியாவது அமைக்கப்பட வேண்டும். "பாலர் பாடசாலை இயங்குவதற்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினால் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது" என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அவர்கள் கூறியுள்ளார். அத்துடன் 10 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் கல்வி பயிலக்கூடிய பாடசாலை ஒன்று ஒரு கிலோமீற்றர் தூரத்தில் புனரமைக்கப்பட்டும், இயங்காத நிலையில் இருப்பது இங்கு நோக்கத்தக்க விடயமாகும்.

கோட்டையடிக் குடியிருப்புப் பகுதியில், மக்கள் குடியேறிய பின்னரும் மிதிவெடிகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து மிதிவெடி அகற்றுவோருக்கு அறிவித்த போது அவர்கள் குடியிருப்பில் ஒரு பகுதியில் மாத்திரம் வெடிப்பொருட்கள் இருக்கலாம் என எண்ணி, அடையாளம் இட்டுச் சென்றுள்ளனர். இது குறித்து கிராமவாசி ஒருவர் கூறுகையில், "குடியிருப்பிற்கு அருகில் மிதிவெடிகள் இருப்பதால் என்னேரமும் அஞ்சியே வாழ்கின்றோம், எமது பிள்ளைகளையும் விளையாட விடக்கூடப் பயமாக இருக்கின்றது'' என மிகவும் கவலையுடன் தெரிவித்தார்.

## ஆலயச் சூழல்

இக்கோட்டையடிக் கிராமத்தில் ஒரு சைவ ஆலயம் அமைந்துள்ளது, அது முனியப்பர் ஆலயம் ஆகும். அது சேதமடைந்த நிலையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிமூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இவ் ஆலயத்திலேயே இக்குடியிருப்பு மக்கள் தமது சமயச் சடங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக் கிராமம் மின்சார வசதிகள் அற்றதாய், இந் நூற்றாண்டில் அடிப்படை வசதிகளைக் கொண்டிராத கிராமங்களில் ஒன்றாய் தெரிவு செய்து கொள்ள முடியும். ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடும்போது இக்கோட்டையடிக் கிராமம் பல்வேறுபட்ட நிலையில்



புனரமைக்கப்பட்டுவரும் முனியப்பர் ஆலயம்.

பின்தங்கிக் காணப்படுகின்றது. இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்து ஏனைய பகுதி வாழ்விடங்களைப் போல் அடிப்படை வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு, இக் குடியிருப்பின்மேல் கருணை கொண்டவர்களின் கைகளில் தான் உள்ளது. இக் குடியிருப்புப் பகுதியில் நிலவும் தேவைகளை, பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதன் மூலம், உதவி செய்ய முன்வரும் பல நிறுவனங்கள், அமைப்புக்கள் இதன் மேல் கவனம் செலுத்துதல் விரும்பத்தக்கது. இவ்வாறு இவர்களின் அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, அம் மக்களின் வாழ்வியல் அபிவிருத்தி எப்போது விருத்தியடையும் என்பதைப் பொறுத்திருந்து தான்பார்க்க வேண்டும்.

**தொகுப்பு : சசிரஜனி புலேந்திரன்**

**அன்பு வாசகர்களே!**

ஊர்த்தரிசனப் பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகிறது. உங்கள் ஊரில் நிலவும் நிறை குறைகளை எழுதி, உங்கள் ஊருக்குப் புத்துயிர் அளியுங்கள். உங்கள் ஆக்கங்களைப் புகைப்படங்களுடன்,

ஊர்த்தரிசனம்
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

# சமாதான முயற்சிகள் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்க ரணில் அரசு தவறிவிட்டது

## புதிய அரசை மக்கள் நாட இதுவே காரணம் முன்னாள் காணி அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)
கூட்டமைப்பு அரசு மேற்கொள் ளும சமாதான முயற்சிகள் யதார்த் தமாக இருக்காது. ஏனெனில் புலி கள் தாம் சமர்ப்பித்த இடைக் கால தன்னாட்சி அதிகார வரை



வின் அடிப்படையிலேயே பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட வேண் டும் என்று கேட்டுள்ளனர்.

அத்துடன், நோர்வேயின் மத்தி யஸ்தத்தை ஜே.வி.பியினர் ஏற்க னவே நிராகரித்துள்ளனர்.

அதிகாரப் பரவலாக்கலையும் மறுத்திருந்தனர். இந்நிலையில் ஜே.வி.பியினர் சமாதான முயற் சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படு வார்கள் என்பது சந்தேகமே.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன் னாள் காணி அமைச்சர் ராஜித சேனா ரட்ண,

கொழும்புத் தமிழ் நாளிதழ் ஒன றுக்கு அளித்த பேட்டியில் அவா மேலும கூறுகையில்,

### நம்பிக்கையில்லை

புலிகள் இயக்கத்துக்கு இந்த அர சில் நம்பிக்கை இல்லை. அத்துடன், அனுரா பண்டார நாயக்க, தினேஷ் குணவர்த்தன போன்றவர்கள் சமா தான முயர்சிக்கு ஒத்துழைப்பு வழங் குவார்கள் என்பது கேள்விக்குறியே.

தவிர ஜே.வி.பியினர் குறிப்பிட்ட காலப்பகுதியில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் முடிக்கப்பட வேண் டும் என்று கூறியுள்ளனர்.இது யதார்த் தத்திற்குப் புறம்பானது.

பேச்சுவார்த்தை மூலம்எட்டப்படுகின்ற சமாதானம் மற்றும் இனப் பிச்சி னைக்கான தீர்வு இலங்கை அர சாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கௌரவம் அளிக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

ஐ.தே.மு.அரசு முன்னர் இதயசுத் தியுடன் மேற்கொண்ட சமாதானச் செயற்பாடுகள் தொடா்பாக நாட்டு மக் களுக்குத் தெளிவான புரிந்துணர்வு இருக்கவில்லை.

### தெளிவில்லை

இதுதொடர்பான தெளிவுபடுத் தல்களை அரசாங்கம் மேற்கொள்ள வில்லை,அரச ஊடகங்கள் இலாப நோக்கம் கருதியே செயற்படுத்தப் பட்டன.

அரச ஊடக்ங்களை அரசாங்கம் தேவைப்பட்ட விதத்தில் பயன் படுத்த வேண்டும் என்று நான் கூற வில்லை.

இருப்பினும் நாம் மேற்கொண்ட சமாதானச் செயற்பாடுகள் தொடர் பாக அரச ஊடகங்கள் மூலம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தி இருக் கலாம்.

இது தொடர்பான முழுமையான தெளிவு மக்களுக்கு இல்லாததால் அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி கொண்டனா்.

### எதுவும் செய்யவில்லை

பொதுஜன ஐக்கிய முன்னியின் 7வருட ஆட்சிக் காலத்தில் பல்வேறு இன்னல்களுக்கும் துன்பங்களுக் கும முகம் கொடுத்தவாகளுக்கு நாம் ஒன்றும் செய்யவில்லை.

இதில் எமது அரசாங்கம் அககறை கொள்ளவும் இல்லை. இதனால் கடந்த தேர்தலில் எமது கட்சி ஆதர வாளா்களுக்கு கட்சிக்காக உழைக்க மனம் இடம் கொடுக்கவில்லை. அத்துடன், அரச தரப்பில் சிலருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் எழுந் தன. சிலர் காடைத்தனங்களில் ஈடு பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இதற்கும் கட்சியின் தலைமை ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் ரணில் விக்கிரமசிங்க மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை உடைந்து போனது, வலுவிழந்தது. அவரின் உண்மைத் தன்மை பலனற் றுப போனது. அவர் மட்டும் உண் மையானவராக இருந்தால் போதாது. கடசியில் ஏனையவா்களும் உண்மை யானவா்களாக நடந்து கொள்ள வேண் டும்.

இது தொடர்பாக அரசாங்கம் தெளிவுடன் நடந்து கொண்டிருந் தால ஜனாதிபதியால் பாராளுமன் றத்தை கலைத்திருக்கவே முடியாது என்று தெரிவித்துள்ளார். (உ)

## கனகநாயகத்தின் 100வது அகவை விழா

(யாழ்ப்பாணம்)
யாழ். சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடாததும் அமரர் எஸ். ஆர். கனகநாயகத்தின் 100வது அகவை நிறைவு விழா இன்று பி.ப. 3.30 மணிக்கு யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலய சுப்பிரமணியம் மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தலைவர் அ. தற்பரானந் தன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் இளைப்பாறிய அரசாங்க அதிபா் எஸ். சிவஞானம், யாழ். வல யக் கல்விப் பணிப்பாளா ப. விக்கி னேஸவரன், சைவ வித்தியா விருத் திச் சங்க முன்னாள தலைவர் பேரா சிரியர் ச.வை. பரமேஸ்வரன் ஆகி யோா் சிறப்புரைகளை நிகழ்த்தவுள் ளனர். (உ)

## சோனியா காந்திக்கு சங்கரி வாழ்த்துச் செய்தி

(கொழும்பு)
தேர்தல் வெற்றி குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலை வர் வி.ஆனந்தசங்கரி இந்தியக் காங்கிரஸ் தலைவி திருமதி சோனியா காந்திக்கு வாழ்த்துச் செய்தியொன்றை கடந்த வெள் ளியன்று அனுப்பிவைத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டிருப்பதா வது,

தங்களின் பிரமாண்டமான தேர் தல் வெற்றியையிட்டு பெரு



மகிழ்ச்சியடைகின்றேன்.பலகோடி இந்திய மக்களின் உள்ளங்களை மட்டுமன்றி இலங்கையர்களின் உள்ளங்களையும் நேருக்களும், காந்திகளும் அலங்கரிக்கின்றன. தங்களின் பெருமைக்குரிய மாமி யார் இந்திராகாந்தியும் அன் பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய



கணவர் ராஜீவும் தமிழர்களின் விவகாரத்தில் பெரிதும் உதவி யுள்ளனர்.

உலகின் மிகப்பெரிய ஜனநா யக நாட்டின் பிரதம மந்திரியாக பதவியேற்கும் நீங்கள் உங் களின் கணவரின் கனவுகளை நிறைவேற்றுவதோடு இந்தியா விற்கு மட்டுமல்லாமல் அயல் நாடு களுக்கும் உதவக்கூடிய வகை யில் புதுயுகத்தை உருவாக்குவீர் கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில்,பல ஆண்டுகள் நீதியான, நியாயமான தங்களின் ஆட்சி நிலைக்க வேண்டுமென இந்திய மக்களை மனமார வாழ்தறுகின் றேன் என்றுள்ளது. (உ)

## இவ்வருடத்தில் இற்றைவரை டெங்கு நோய்க்கு இலக்கான 2,619 பேரில் 11 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் கடந்த ஜனவரி மாதம் முதல் இம்மாத நடுப்பகுதி வரை 2ஆயிரத்து619 பேர் டெங்குநோய் வைரஸ் தாக் கத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் 11பேர் இதனால் இறந்துள்ளதாக வும் சுகாதாரத்துறை மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள் ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் இந நோய்த்தாக்கம் மிகவும் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ள தால் இதனை முற்றாக கட்டுப் படுத்துவதற்கு ஏற்றவகையில் தேசியத்திட்டம் ஒன்று வகுக்கப்பட் டுள்ளதாக சுகாதாரப் பாதுகாப்பு, போஷாக்கு அபிவிருத்தி அமைச் சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இத்திட்டமானது கிராமம், நக ரம், பிரதேசம், மாவட்டம் மற்றும் மாகாணம் ஆகிய மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள துடன் இந்நோயைக் கட்டுப்படுத்து வதற்குப் பொதுமக்கள் முழுமை யான ஒத்துழைப்பு வழங்க வேணடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை,கொழும்பு,கம்பஹா, குருநாகல்,கண்டி ஆகிய மாவட் டங்களில் டெங்கு நோய் அதி களவில் பரவியுள்ளதாக இனம் காணப்பட்டாலும் கம்பஹாவில் மூவரும் மட்டக்களப்பு, திருகோண மலை, கேகாலை ஆகியவற்றில் தலா இருவரும், கொழும்பு மற் றும் குருநாகல் ஆகியவற்றில் தலா ஒவ்வொருவரும் இதுவரை டெங்கு நோயினால் இறந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

### நிரந்தரப் பேச்சுமொழி பெயர்ப்பாளர் இல்லை

## ஆட்கொணர்வு மனுக்களை விசாரிக்க வழியில்லை

(யாழ்ப்பாணம்)
படையினரால் கைது செய்யப் பட்டுக் காணாமல் போன தமிழ் இளை ஞரகள் மற்றும் யுவதிகள் தொடர் பான ஆட்கொணர்வு மனுக்களை விசாரிக்க முடியாத நிலை காணப் படுவதாக சட்டமா அதிபருக்கு சாவ கச்சேரி நீதிபதி அறிவித்துள்ளார்.

நிரந்தரப் பேச்சு மொழி பெயர்ப் பாளர்கள் எவரும் இல்லாத கார ணத்தினாலேயே இந்த வழக்கு களை வசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாதிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். 1996 ஆம் ஆண்டு மற்றும் 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன 22 இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களே சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கைதடி மற்றும் நாவற்குழிப் பகுதியில் குறித்த காலப்பகுதியில இடம்பெற்ற சுற்றிவளைப்பு ஒன்றின போது கைது செய்யப்பட்டு காணாமல் போன இளைஞர்கள் சிலரது சார்பிலேயே இந்த ஆட்கொணர்வு மனுக்கள் யாழ். மேல்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தாக்கல் செய்யப் பட்ட ஆட்கொணர்வு மனுக்களில் 22 ஆட்கொணர்வு மனுக்கள் ஆரம்ப விசாரணைகளுக்காக சாவகச் சேரி நீதவான் நீதிமன்றத்துக்கு மாற் றப்பட்டிருந்தது.

காணாமல் போயிருந்த கைதடிப் பகுதியைச் சேர்ந்த இராமநாதன் அன்னலிங்கம் என்ற இளைஞர் தொடர்பாக அவரது மனைவியான அன்னலிங்கம் ஜெய கலா ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந் தது. அவ்வேளையில், உரிய மொழி பெயர்ப்பாளர்கள் இல்லாத தால், விசாரணைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதிக்கு மாற்றப் பட்டிருந்தன.

இதனையடுத்தே, இந்த மொழிபெயர்ப்பாளர் பிரச்சினை தொடர்பாக சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆட்கொணர்வு மனுவில் தற் போதைய படைத் தளபதியும் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்தவருமான லயனல பலகல்ல, கைதடிப் பகுதிக்கு அப் போது பொறுப்பாக விருந்த கப்டன சுமிந்த கெபிட்டிக்கொலாவ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதி களாக குறிப்பிடப்பட்டிருநதமை குறிப்பிடத்தக்கது. (உ)

## புதிய நிலையத்திற்கு எட்டுப்பேர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)
வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாயிலிருந்து 7எழுதுனர் கள் மற்றும் ஒரு தொழில்நுட்ப உத்தி யாகத்தர் ஆகியோரே புதிய நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனா்.

மேற்படி இடமாற்றம் எதிர்வரும் 19ஆம் திகதியில் இருந்து வழங்கப் பட்டுள்ளது.

புதிய சேவை நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்பவர் களின் விபரங்கள் வருமாறு,

எழுதுநர்களான இ.பரமநாயகம் (கோப்பாய் சு.வை. அ.அலுவலகம்) எஸ்.மனோகரன் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்) பே.சுகுமார் (சுழி புரம் பிரதேச சபை)பே. ஞானசூரியன (சுழிபுரம் பிரதேச சபை) எஸ்.விஜய ரட்ணம் (யாழ். வலயக கல்வி அலுவல கம்) துநாதசொரூபன (வலிகாமம் கல்வி அலுவலகம்) புசந்திரசேகரம் (மானிப் பாய் சு.வை. அதி. பணிமனை) தொழிநுட்ப உத்தியோகத்தரான ந. ஜெயசீலன் (யாழ்.கட்டிட திணைக் களம், மாகாணம்) (உ)

## புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட செய்தியை மறுக்கிறது க. கா. குழு

(கொழும்பு)
மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயகக உறுப்பினர்கள் மீது குண்டுத் தாக குதல் நடத்தப்பட்டதாக வெளி வந்த செய்திகளில் உண்மை எதுவும் கிடையாது என போர் நிறுத்தக கண்காணிப்புக் குழுவினர் தெரி வித்துள்ளனர்.

மட்டக்களப்பு படுவான் கரை யில் கடந்த புதன்கிழமை இரவு கருணா குழுவினரால் குண்டுத்தாக் குதல் ஒன்று மேற்கொள்ளப்பட் டதாகவும், இதன்போது சுமார் 30 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்ட தாகவும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்நிலையில், இச்சம்பவம் குறித்து ஆராயும் பொருட்டு தாம் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், அங்கு குண்டு வெடிப்பு இடம்பெற்றதற்கான அடை யாளமெதுவும் காணப்படவில்லை எனவும் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினர் தெரிவித் துள்ளனர்.

இத்தகையதொரு சம்பவம் எதுவும் இடம்பெறவில்லையென தமிழீழ விடுதலைப் புலிகளும் மறுத்துள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் குரல் தர வல்ல அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, படுவான் கரை யில் குண்டுவெடிப்பு இடம்பெற்ற தாக போர் நிறுத்தக் கண்காணிப் புக குழுவினருக்கு இலங்கைப் படை யினரே அறிவித்ததாக வெளியான செய்திகளை படைத்துறையின் குரல் தரவல்ல அதிகாரி சுமேத பெரேராவும் மறுத்துள்ளார்.

இச்செய்தி கொழும்பு ஆங் கில, சிங்கள ஊடகங்கள் சிலவற் றில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ)

# அரசியல் கைதிகளுக்கு எதிரான விசாரணையைத் துரிதப்படுத்துக

## நீதியரசர் மேல் நீதிமன்றத்திற்கு உத்தரவு

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான வழக்குகளை துரிதமாக விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா மேல் நீதிமன்ற நீதிபதிக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் .

வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஆரம்பிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த சுமார் 150ற்கும் அதிகமான வழக்குகள் தற்போது விசாரணை முடிந்து அது தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை மேல் நீதிமன்றத்தில் மேலும் விசாரணை முடிவடையாமல் இருக்கும் சுமார்20ற்கு மேற்பட்ட வழக்குகள் விரைவில் முடிவுக்கு கொண்டு வர துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்குப் புறம்பாக வெலிக்கடைச் சிறை சாலையில் மஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

(உ)

# தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகள் தாயகம் திரும்புவதில் விருப்பம்

(மன்னார்)

இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் வசித்து வந்த ஈழ அகதிகள் 50 பேர் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து தமிழகத்திலுள்ள நலன்புரி முகாம்களில் இவர்கள் வாழ்ந்து வந்தனர்.

நேற்று முன்தினம் இந்திய மீனவர்களின் உதவியுடன் தாயகம் திரும்பிய இவர்களை மன்னார் பேசாலை மீனவர்கள் தலைமன்னாரில் கரைசேர்த்தனர்.

தலைமன்னார், பேசாலை, பள்ளிமுனை, யாழ்ப்பாணம், இளவாலை ஆகிய சொந்த இடங்களைச் சேர்ந்த இவர்கள் தற்போது அங்கு மீளக் குடியேறி வருகின்றனர்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை மதுரை மாவட்டம் ஆனையூர் அகதி முகாமில் தங்கியிருந்த மன்னாரைச் சேர்ந்த 14 ஈழ அகதிகள் தாயகம் திரும்பியமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-61,8)

# —சமதான முயற்சிகளை எதிர்த்து— நாடளாவிய ரீதியில் எதிர்ப்புப் போராட்டம்

## நடத்தத் தயாராகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமானது நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் மேற்கொண்டு வரும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சு வார்த்தை முயற்சிகளைக்கண்டித்து நாடளாவிய ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்த ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

தமிழர்களின் பிரதிநிதிகளான ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரையும் பேச்சுவார்த்தையில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டும் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்து வரும் ஹெல உறுமய, இது தொடர்பில் நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்திட்டங்களிலும் ஈடுபட்டுள்ளது.

இந்த வகையில், எதிர்வரும் நாட்களில் பாணந்துறை, மஹரகம, கம்பஹா ஆகிய நகரங்களில் மாபெரும் பொதுக் கூட்டங்களை நடத்தவும் தீர்மானித்துள்ளது.

(உ)

# வேலைதேடி குவைத் சென்ற தமிழ்ப் பெண்கள் மீது துன்புறுத்தல்

## தாய்மையடைந்த நிலையில் 6 பேர்

(குவைத்)

வேலை வாய்ப்புத் தேடி குவைத் நாட்டுக்குச் சென்ற இலங்கைப் பெண்களில் 520 பேர் வரையில் பல்வேறு தரப்பினாராலும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக இங்கிருந்து கடந்த வாரம் குவைத் நாட்டுக்குச் சென்றிருந்த சிங்கள திரைப்பட நடிகர் ரஞ்சன் ராமநாயக்கவே இந்த அதிர்ச்சியூட்டும் தகவலை வெளியிட்டுள்ளார்.

வேலை வாய்ப்புக்காக இங்கிருந்து சென்ற பெண்கள் குவைத் நாட்டிலுள்ள வீட்டு எஜமானர்களால் பல்வேறு பாலியல் சித்திரவதைக்கும், துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு துன்புறுத்தலுக்கு உள்ளானவர்களில், சுமார் 520 பேர் வரையில் தாம் வேலை செய்யும் இடங்களிலிருந்து தப்பிச் சென்று இலங்கை முகவர் நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

எனினும், முகவர் நிலைய அதிகாரிகளும் இவர்களை மண்டபம் ஒன்றில் அடைத்து வைத்து பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கி வருகின்றனர். இவர்களை மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்துளார். இதேவேளை, மேற்படி துன் புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் 45 பேர் தமிழ் பேசும் பெண்கள் என்பதுடன், இவர்களில் 6 பேர் கர்ப்பிணியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-18)

# அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்குத் தனித் துறை

(கொழும்பு)

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கென தனியானதொரு துறை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழ் மொழியின் தனித்துவத்தை உணர்ந்து அம் மொழிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து இந்தியாவில் இருந்து வெளிவரும் ஆனந்த விகடன் விரிவான ஆசிரியத் தலையங்கம் ஒன்றைத் தீட்டியுள்ளது.

மேற்படி ஆசிரியத் தலையங்கத்தில் 300 ஆண்டுகள் பழமையும் பாரம்பரியமும் வாய்ந்த யேல் பல்கலைக்கழகமும் நம் தாய்மொழியாம் தமிழைத் தனித்துப் பயிற்றுவிக்க தனியானதொரு துறையை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

இந்தி, உருது, வங்காளம் மற்றும் நேபாளம் ஆகிய தெற்காசிய மொழிகள் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டுவந்த இந்தப் பல்கலைக் கழகத்தில் இப்போது தமிழும் அரியணையில் அமர்த்தப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள சுமார் 8 கோடி மக்களால் பேசப்படுவதும் 5 நாடுகளில் தேசியமொழியாக இருப்பதுமான தமிழ் மொழி இற்றைக்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்தது.

இதன் வரலாறும் அதனையொட்டிய கலாசாரமும் போற்றுவதற்குரிய பெருமைவாய்ந்தவை என தமிழின் மாண்புகளை அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகம் உளமார அங்கீகரித்து இருப்பதானது தமிழர்கள் எல்லோருக்கும் பெருமை தரும் ஒன்றேயாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-18)

# விண்ணப்பம் கோரல்

ஆயுர்வேத திணைக்களத்தின் வைத்திய அலுவலர் பகுதியின் ஆரம்பத்தர வைத்திய அலுவலர்பகுதிக்கு சுதேச வைத்திய அமைச்சினால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவக்கலை ஏதாவதொன்றில் 5 ஆண்டு பயிற்சி நெறியை முடித்துப்பட்டம் பெற்றதுடன் ஒரு வருடகால தகுதிகூர் நிலைக் காலத்தைப் பூர்த்தி செய்தவர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத விஞ்ஞான நிறுவனமொன்றில் 5 ஆண்டு மேற்குறிப்பிட்ட பாடநெறிகளை முடித்து டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக்கொண்டவர்கள் இதறகு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் 'ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மகரகம' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

* * *

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் 'பதிவாளர் சேவை -தரம் II ' பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்குத் தகுதியானவர்களிடமிருந்து பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் சட்டம் தொடர்பான பட்டதாரிகள் அல்லது சட்டக் கல்லூரியில் இறுதி சட்டப் பரீட்சையில் சித்தபெற்ற சட்டத்தரணிகளும் அரசசேவையிலுள்ள தகுதியான உள்ளக அலுவலர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(உ-18)

# தேவைகள் இனம் காணப்படும

பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் என்பவற்றின் அடிப்படைத் தேவைகள் இனங்காணப்பட்டு.அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சின் அதிகாரிகளை ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடியபோது கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் இவ்விடயத்தினைத் தெரிவித்துள்ளார். இச்சந்திப்பின் போது பிரதிக் கல்வியமைச்சர் டினேஸ் குணவர்தன, அமைச்சர் மங்களசமரவீர ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(உ-61,8)

# தேர்தல் வன்முறைகள் குறித்த விசாரணைகள் விரைவில்

கடந்த பொதுத் தேர்தலின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் வன்முறைகள் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து இது தொடர்பாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலின் போது இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பல இன்னும் விசாரிக்கப்படாமல் உள்ளன.

இந்த விசாரணைகள் யாவும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக நிறைவு செய்யப்படவுள்ளன.

இதேவேளை மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகளுக்கென அரச உடமைகளைப் பயன் படுத்துவதைத் தவிர்ப்பதற்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-61,8)

# மலையக அபிவிருத்தி பற்றி மக்களிடம் அபிப்பிராயம்

மலையக அபிவிருத்தி தொடர்பாக அப்பிரதேச மக்களின் கருத்துக்களைக் கேட்டறிவதென தபால் தொலைத் தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அபிவிருததி நடவடிககைகளை மேற் கொளவதே மிகவும் சிறந்தது என இனங் காணப்பட்டுள்ளது

இப்புதிய வேலைத் திட்டத்தின்,கீழ் மலையகத்தில் உள்ள 4 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பிரதிநிதிகளிடமும் கருத்துக்கள் பெறப்படவுள்ளன.

இதேவேளை மலையக அபிவிருத்திக்கென வெளிநாட்டு நிதி உதவி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது இதன்படி சுமார் 600மில்லியன் ரூபா இத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட வுள்ளதென தபால் தொலைத் தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர் டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

(உ-61,8)


பிரதி வெள்ளி தோறும்
வலம்புரியுடன்
KID'S OF ENGLISH
(ஆங்கில இணைப்பு)
வெளிவரவுள்ளது.
பள்ளிச் சிறுவர்களே!
மற்றும் பருவத்தினரே!
பயனடைய வாங்குங்கள்.
Kid's of English



மீண்டும் உங்கள் வலம்புரியில்
விவாத அரங்கு
விடயம்
தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்
பலப்படுகின்றது
பலவீனப்படுகின்றது
உங்கள் கருத்துக்களை
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

## சோதனை கண்டு சோர்ந்திட மாட்டேன்!

# எனது உரிமைக்காக இறுதிவரை போராடுவேன்

# முரளிதரன் சவால்

**ஐ.சி.சியினால் தடை செய்யப்பட்ட தூஸ்ரா பந்து வீச்சை சிம்பாப்வே அணிக்கெதிராக 2வது டெஸ்ட் போட்டியில் பயன் படுத்த எண்ணியிருப்பதாக முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

உலக சாதனையாளரும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளருமான முத்தையா முரளிதரன் மேலும் இது பற்றிக் கூறுகையில்,

ஐ.சி.சியின் விதிகளுக்கமைய, எனது தூஸ்ராப் பந்து வீச்சுப்பாணி இருக்கவில்லை என கூறி தூஸ்ரா பந்து வீச்சுக்கான தடையை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.


இது எனக்கு ஏமாற்றம் அளிப்பதாகவுள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக சட்ட ஆலோசனை பெற விருப்பதுடன் தொடர்ந்தும் தூஸ்ராப் பந்து வீச்சைப் பயன்படுத்தவுள்ளேன்.

இது தொடர்பாக எனது வழக்கறிஞர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளதுடன் சாதகமான நல்லதோர் முடிவை எதிர்பார்க்கிறேன்.

என்னைப் பொறுத்த வரையில் இது விடயத்தில் எனக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவே கருதுவதுடன் இறுதிவரை எனது உரிமைக்காக போராட முடிவெடுத்துள்ளேன்.

எனது பந்து வீச்சை மாத்திரம் பரிசோதிப்பதன் மூலம் புதிய பந்து வீச்சு விதிகளை 'உருவாக்குவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

இதுவரை வேறெந்தவொரு சுழற் பந்து வீச்சாளரையும் இவ்வாறான பரிசோதனைக்கு உட்படுத்தியதுமில்லை. அவர்கள் கையளவை (பந்து வீசும் அளவு) கணக்கிட்டதும் இல்லை. என்னை மாத்திரம் இவ்வாறான சோதனைக்கு ஏற்படுத்தியது ஏன் என எனக்குப் புரியவில்லை.



இதுவரை நான் மட்டுமே இவ்வாறான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு எனது தூஸ்ரா பந்து வீச்சை அவர்கள் தடைசெய்யலாம்? எனது அணிக்காக பயிற்சியாளருக்காக நான் தூஸ்ராவைப் பயன்படுத்தியே ஆகவேண்டும். எனவே சட்டவல்லுநர்களின் உதவியுடன் நான் சிம்பாப்வே அணிக்கெதிரான போட்டியில் தூஸ்ராப் பந்து வீச்சைப் பயன்படுத்த வேண்டும்.

இதற்கு முன் இதனால் எனது கிரிக்கெட் வாழ்க்கைக்கு எவ்வகையிலாவது பாதிப்புக்கள் ஏற்படுமா என்பதை அறிந்து கொள்வதும் அவசியம் என்று கூறியுள்ளார்.

(உ)

## விளையாட்டுச் செய்திகள்

# விதிகளுக்கு முரணான வகையில் முரளி விளையாடமாட்டார்

## கில்கிரிஸ்ட் நம்பிக்கை

இலங்கையணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான முரளிதரனின் மிக முக்கியமான பந்து ஆஸ்திரமான தூஸ்ராவுக்கு ஐ.சி.சி. தடைவிதித்தாலும் முரளிதரன் ஒரு அபாயகரமான பந்து வீச்சாளர்.

இவ்வாறு கூறியுள்ளார் அவுஸ்திரேலிய அணியின் உப தலைவரும் விக்கெற் காப்பாளருமான அடம் கில்கிறிஸ்ட். அவர் முரளி பற்றி மேலும் விபரிக்கையில்,

வோல்ஸின் உலக சாதனையை முறியடித்து ஓரிரு தினங்களேயான நிலையில் தூஸ்ராப் பந்து வீச்சைப் பயன்படுத்த வேண்டாம் என முரளிதரனுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தூஸ்ராப் பந்து வீச்சை பயன்படுத்தாவிட்டாலும் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் முரளிதரன் ஒரு அபாயகரமானவர்.


இவரிடம் அளவுக்கு அதிகமான திறமை ஒளிந்துள்ளது. அவரது பந்து வீச்சு அஸ்திரங்களில் இருந்து ஒன்றை மட்டும் குறைத்து விடுவதால் அவரது பந்து வீச்சு சாதாரணமாகி விடாது. அவர் ஒரு சிறந்த பந்து வீச்சாளர் என்பது எப்போதோ நிரூபணமானதொன்று.

விதிகளுக்கு முரணாக அவர் விளையாடுவாரென நான் நம்பவில்லை என்றார். (உ)



மார்ட்ரிட்டில் இடம்பெற்ற நீச்சல் சம்பியன் அரையிறுதிப் போட்டியில் 100 மீற்றர் தூரத்தைப் பின்பக்கமாக நீந்திக் கடக்க ஆயத்தமாகிறார் றோகர்.ள

ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான மகளிர் கைப்பந்தாட்டப் போட்டியில் ரஷ்ய வீராங்கனை பெலிகோவா அடித்த பந்தை தடுத்துத் திருப்புகிறார் தென்கொரிய வீராங்கனை கிம் ஸிஜங்.




# ஆஷஸ் தொடரைக் கைப்பற்றுவது இங்கிலாந்து கிரிக்கெட் அணியே

## ஸ்டீவ்வோ தெரிவிப்பு

மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்துக் கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற வாய்ப்புள்ளதென அவுஸ்திரேலியக் கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ்வோ கருத்துக் கூறியுள்ளார். அவுஸ்திரேலிய அணிக்கெதிரான ஆஷஸ் தொடரில் கடைசியாக இங்கிலாந்து அணி 1987 ஆம் ஆண்டு மைக் கேட்டிவ் தலைமையில் வெற்றி பெற்றது.


கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்குப் பின் இங்கிலாந்து அணி அதே வலிமையோடு காடசியளிக்கிறது.

அடுத்த வருடம் ஆஷஸ் டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் நடைபெறுவது இங்கிலாந்து அணிக்கு கூடுதல் பலமளிக்கும். சொந்த மண்ணில் இங்கிலாந்து அணியின் வீரர்கள் துடிப்போடு ஆடுவார்கள். இங்கிலாந்து அணியில் தற்போது இளம் வீரர்கள் பலர் அறிமுகமாகி நன்றாக ஆடி வருகிறார்கள். அவர்கள் அனைவரும் ஆஷஸ் தொடருக்குள்ளாக தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வார்கள் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

(உ)

# ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்வும் மீட்கப்பட்ட அனுபவத்தின் வாழ்வாகும்

**வே**ளை வரும் போது வெற்றி வரும் என்பார்கள். காலமும் கனிந்தால் காரியம் கைகூடுமாம்.



கஸ்ரப்பட்டவனின் கூலியை காலங் கடத்தினாலும் கடைசியில் ஓர்நாள் பன்மடங்காகக் கொடுக்க வேண்டிவரும்.

இப்படி கிராமத்திலே பல முதுமொழிகளைக் கூறக் கேட்டிருக்கின்றோம். ஆனால் இவற்றில் உண்மை இல்லாமலில்லை. துன்பங்கள், வேதனைகள், நெருக்கடிகள், பழித்துரைப்புகள், அநீதிகள் இவைகள் எல்லாம் நிலையானவைகள் அல்ல.

ஏசாயா இறைவாக்கினர் கூறுவது போல ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலமுண்டு. விதைக்க ஒருகாலமென்றால் அறுக்க ஒரு காலமுண்டு, நட ஒருகாலமென்றால் பிடுங்க ஒருகாலமுண்டு என்றும் பலவற்றை கூறிவைத்துள்ளார். அவ்வாறுதான் இயேசுவின் பாடுகள், துன்பங்கள், சிலுவைவழியாக உயிர்த்தெழுதலும் மீட்பும் கிடைக்கப்பெற்றோம்.

### நீதி உயிர்த்து எழும்

ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்வும் மீட்கப்பட்ட அனுபவத்தின் வாழ்வாகும். இதனைப் பலர் உணர்ந்து கொள்வதில்லை, விளங்கிக் கொள்வதில்லை. நாம் ஏதோ ஒரு நிலைக்கு வந்துவிட்டால் மீட்பை அடைந்து கொள்வோம் என்று பகல்கனவு காண்கின்றார்கள்.

தொடர்புச் சாதனங்கள் மட்டுமல்ல பிழையான வழிகாட்டல்களும் வன்முறைக்கு வித்திடுகின்றன. மக்கள் தலைவர்கள் என்று அர்ப்பணித்தவர்கள் பக்கச் சார்பையோ, பகுத்தறிவு வாதத்தையோ கூறி எல்லோரையும் மனிதன் என்று மதிக்கத் தவறுகின்றார்கள். ஒரு சிலருக்கு உபகாரமும், பலருக்கு அபராதமும் கொடுத்து சமாதான செங்கோலில் ஏறி நிற்கின்றார்கள்.

### பரமபிதா காட்டிய பாதை

கடவுளின் நீதி வெளிப்படும் போது அநீதர்கள் வெட்கித் தலை குனிகின்றார்கள். பாதிக்கப்பட்டவன் மகிழ்வடைகின்றான். கிறிஸ்துவின் உயிர்ப்பாலே சீடர்களிடம் மகிழ்வும் நம்பிக்கையும் ஏற்பட்டதை வாசித்து அறிகின்றோம்.

### அயலானை நேசித்தல

மானிட வாழ்வின் மாண்பு தன்னைப்போல தன்னயலானையும் நேசிப்பதிலே தான் தங்கியுள்ளது. நண்பனுக்கு அன்பு, பகைவனுக்கு வெறுப்பு என்பதுதான் உலகம் கூறும் உபதேசம். ஆனால் பகைவர்களாக ஆக்காமல் பாதுகாத்துக் கொள்பவர்கள் எத்தனைபேர்? உடனடியாகவே நாம் மற்றவர்களை விரோதித்துக் கொள்ளுகின்றோம். கிறிஸ்துவின் உண்மைச் சீடத்துவம் எம்மில் வாழப்படுகின்றதா? மனித பலவீனம் என்ற சாட்டைச் சொல்லிக் கொண்டு அப் பலவீனங்களையே தமதாக்கிக் கொள்கின்றவர்கள் எத்தனை பேர்? எண்ணிறைந்த சாட்சிகள் முன்னிலையிலே இறைவனின் நீதி இருக்கை முன்பாக எப்படி நாம் கணக்குக் கொடுக்கப் போகின்றோம். அன்னை, தந்தையை அவமதிக்கின்ற பிள்ளைகள் எத்தனை பேர்? கூட இருந்தே குழிபறிக்கின்ற பிள்ளைகள் எத்தனை பேர்? சாத்தானையே தேடி ஓடிக்கொண்டு இருப்பவர்கள் சத்திய வழிக்கு எப்போது திரும்புவார்கள்? ஆலயத்தை எப்போது புனிதமெனப் போற்றுவார்கள்? அயலானை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொண்டால் இவையெல்லாம் இலகுவான காரியங்களே!

### தூய்மையும,வாய்மையும், நேர்மையும்

எண்ணத்தில் சொல், செயலில், தூய்மை வேண்டும். வண்ணத்துப் பூச்சிகள் போல நாம் வாழ முடியாது. கண்ணியச் செயற்பாடும், புண்ணியத் தியாகமும் புரிகின்ற பக்குவ நிலையை இயேசு பிரானே எமக்கு மாதிரிகை காட்டித் தந்துள்ளார்.

நாம் உலகின் போக்குக்கும் செயல்களுக்கும் எம்மை அடிமைகளாக்கிக் கொள்ளக்கூடாது. திருப்பலி, திருவிருந்து, திருச்செபமாலை, திருவிவிலியம் எம்மை ஆட்கொள்ள சீரிய எம் செம்மனத்தில் இடம் கொடுப்போமானால், அடுத்தவனுக்கு அநீதி செய்ய எம்மனம் இடம் கொடுக்காது. போலிக் கௌரவங்களைப் போற்றமாட்டோம். தூய்மையில்லாக் காரியங்களுக்குத் துணை போகமாட்டோம். குறைபடாத இதயங்களை குறை சொல்ல மாட்டோம். நிறைவையே காணத் துடிப்போம்.

**அன்ரனி பீற்றர்**

இது புனிதத்தின் வழி நடத்தலாகும். பேரின்ப சக்தியின் அருள் சுரப்பாகும். வாழ்வளிக்கும் இறைவனின் அருள் பாலிப்பை வாஞ்சையோடு தேடிப்பெற்றுக் கொள்வோம். பூரண நிறைவான பரம்பொருளை பொழுதெல்லாம் புகழ்ந்தேற்றுவோம். காரிகையாம் கன்னி மரியாள் விரும்பும் திருவிவிலியத் தியானங்களைத் தினமும் தியானிப்போம், அருள் பெறுவோம். □

## பிரான்ஸ் வர்த்தகக் குழு இலங்கை வருகிறது

(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டின் பிரபல இயந்திர உற்பத்தியாளர் லரோஷியா தலைமையிலான வர்த்தகத் தூதுக்குழுவொன்று அடுத்த மாதம் நடுப் பகுதியளவில் இலங்கை வரவுள்ளது.

தென்னந்துண்டைப் பதனிடுதல், துணி ஆலைகளின் கழிவுத் துணிகளை மீள் உபயோகப்படுத்தல் ஆகியதுறைகளில் அதிநவீன வழிமுறைகளை இந்தக் குழு அறிமுகம் செய்யவுள்ளது.

தங்களது இயந்திர சாதனங்களையும், நிபுணத்துவ அறிவையும இலங்கையில் அறிமுகம் செய்வது பற்றி இவ் வர்த்தகக் குழு விரிவாக ஆராயவுள்ளது.(உ-61,8)

## இன்று நெல்லியடியில் கனவு மெய்ப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்து கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற ஆதரவில், இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.00 மணிக்கு வடமராட்சி திரைப்பட வட்டத்தின் காண்பியல நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் ஜானகி விஸ்வநாதனின் இயக்கததில் உருவான 'கனவு மெய்ப்பட வேண்டும்' எனும் முழு நீளத் திரைபபடம் காண்பிக்கப் படவுள்ளது.

'நல்ல சினிமா ஊடாக இன்னுமோர் உலகம்' எனும் மகுடத்தின் கீழ இடம்பெறும் இந்நிகழ்வின் முடிவில் இடம்பெறும் விமர்சனம் மற்றும் கலந்துரையாடலை இயக்குனர் ஞானரதன் ஐ.சண்முகலிங்கம் ஆகியோர் வழிநடத்தவுள்ளனர். (உ)

## கூட்டம்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று காலை 9மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பிரிட்டன் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ)

# வட - கிழக்கு அபிவிருத்திப் பணிகளை துரிதகதியில் முன்னெடுத்தல் அவசியம்

## புனர்வாழ்வு அமைச்சின் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்படவேண்டும் என நிவாரணங்கள் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த விரைவான நடவடிக்கைக்கு, கடந்த இரண்டு வருடங்களுக்குள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறந்த பலனைத் தராமையே காரணமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளில் போர் அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துதல், ஜீவனோபாய தொழில் சார் நடவடிக்கைகளை மேம்படுத்தல் ஆகியவற்றைத் துரிதப்படுத்த வேண்டும்.

அத்துடன், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதோடு இந்தத் தேவைகளுக்கு அவசியமான நிதியுதவிகளை விரிவுபடுத்த வேண்டும். தேவைகளுக்கேற்ப ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதுமானவையல்ல என்பது தெளிவாகின்றது.

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவற்றை மீளக்கட்டியெழுப்ப இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

யுத்த அனர்த்தம் காரணமாக போக்குவரத்திற்கு மூடப்பட்டிருந்த ஏ-9 வீதி கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் காலத்தில் மீண்டும் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டது எனினும், இந்த வீதியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உரியமுறையில் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவித்தார்.

(உ-121)

# வாசித்தல் மாதமாக ஒக்டோபர் பிரகடனம்

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசித்தல் மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நூலக ஆவணப்படுத்தல் சேவைகள் பணியகம் அறிவித்துள்ளது.

சமூகத்தின் சகல பிரிவினரிடையேயும் வாசிப்புப் பழக்கம் வெகுவாக அருகி வருவதைத் தொடர்ந்து இந்த விசேட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டின் நூலக, தகவல் உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்காக தனியார் துறையினர், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனிப்பட்ட நபர்கள், உள்ளூராட்சி அதிகாரிகள், மாகாண சபைகள், அரசாங்கம் என்பனவற்றின் உதவியுடன் இலங்கை முழுவதும் வாசிப்பு பிரசாரம் ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதன் மூலம் மக்களுக்குத் தமது தனிப்பட்ட, கல்விசார், பொருளாதாரம் சார் நடவடிக்கைகளை முன்னேற்றிக்கொள்வதற்குரிய தகவல்களைப் பெறமுடியும் என தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

# மீளக்குடியமர்த்துவதில் உள்ள மர்மம் துலங்க இரகசியமான முறையில் ஆய்வு

## ம.உ.ஆ.கு.நடவடிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் காரணமாக இடம்பெயர்ந்த கணிசமான குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை என்றும், இவர்கள் மீளக்குடியமரத் தயங்குவதற்கான காரணங்களை ஆராய இரகசியமான முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழுத் தலைவி கலாநிதி ராதிகா குமாரசுவாமி இதுபற்றி அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்தும் திட்டத்தை செயற்படுத்தும் போது இடம்பெறும் பயனாளிகள் தெரிவில் பல மோசடிகள் இடம்பெறுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனால் இது தொடர்பாக இரகசிய விசாரணைகள் நடத்தப் படவுள்ளன.

இதேவேளை, மீள்குடியேற்ற நடவடிககையில் ஈடுபடும் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பயனாளிகளைத் தெரிவு செய்யும் போது மேற்கொள்ளும் அடிப்படைகளை வெளிப்படுத்த வேண்டும்.

மக்களை மளக் குடியமாத்தும் முன்னர், சுகாதாரவசதிகள் உள்ளிட்ட மற்றும் பிற வசதிகள் இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதுடன், அவர்களுக்கு வேண்டிய உலர் உணவு நிவாரணங்களை ஒருவருட காலத்திற்கு நீடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவி ராதிகா குமாரசுவாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (உ-61,10)

# மட்டக்களப்பு புது ஊரில் கைக்குண்டுத் தாக்குதல்

## 4பாதுகாப்பு படைப்பிரிவினர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புது ஊர்ப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவ பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த நால்வர் காயமடைந்துள்ளனர்.

புதுஊரில் உள்ள விபுலானந்தர் வீதியில் ரோந்துப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த நால்வரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டின் ஆரம்பம் முதல் இதுவரை 12 சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இதனால் 14 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-61,10)

## விளை நிலங்களில் விஷமிகள் கைவரிசை

(இணுவில்)

கோண்டாவில் காரைக்கால் வீதியில் உள்ள விவசாய நிலங்களில் தினமும் பெருமளவு கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுவருவதாக சம்பந்தப்பட்ட விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

பிளாஸ்ரிக் பொருட்கள்,தகரங்கள போன்ற உக்காத கழிவுப் பொருட்களும் இதில் அடங்குவதாகவும் இவை இரவோடு இரவாகவே தமது விளை நிலங்களில் கொட்டப்படுவதாகவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-122)

# இன்று ஒரு தகவல்

## சொல்லைப் பேணுக

இன்று சமூகப் பிறழ்வுகள்,கலாசாரச் சீரழிவுகள் என்று எல்லாரும் பேசுகின்றனர்.எல்லாக் குறைபாடுகளுக்கும் அடிப்படைக் காரணம் என்ன? சொல்லுவது ஒன்று; செய்வது இன்னொன்று; நேற்று ஒரு பேச்சு; இன்று ஒரு பேச்சு; கேட்டால் "நான் அப்படிச் சொல்லவில்லையே" என்று மழுப்புவது. இதுதான் இன்றைய நாட்டுத் தலைவர்கள் உயர் பதவி வகிப்போர் முதல் அடிமட்டத்து மக்கள் வரை உள்ள நிலை.

திருவாலங்காடு தொண்டை நாட்டில் உள்ள தலம். காரைக்கால் அம்மையார் கைலைநாதர் கட்டளைப்படி அங்கு வந்து அண்டம் உற நிமிர்ந்து ஆடும் கோலத்தைக் கண்டு, "மூத்த திருப்பதிகம்" பாடிய இடம்.திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அந்த அம்மை தலையாலே நடந்து போற்றிய இடம் என்று தாமும் கால் மிதிக்க அஞ்சிய புண்ணிய பூமி. அவர் ஊர் எல்லைக்கு அப்பால் தங்கியிருந்த போது, நடு இரவில் இறைவன் கனவில் தோன்றி "நம்மைப் பாட மறந்தாயோ என்று கேட்டார். அப்போது பாடிய பதிகத்தின் முதல் பாடல்.

துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பாரும் மு(ன்)னை நட்பாய்
வஞ்சப்படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே.

இதில் ஞானசம்பந்தப் பெருமான் சுட்டிக்காட்டும் கதை ஆலங்காட்டு நீலிகதை என்று பிரசித்தமானது. திருவாலங்காட்டில் வாழ்ந்த ஒரு குடும்பத்தில் பிணக்கு ஏற்பட்டது. மனைவிதான் பெற்ற மகவை விட்டு விட்டுத் தற்கொலை செய்து விட்டாள். திடீரென ஏற்பட்ட ஆத்திரத்தில் தன் உயிரைப் போக்கினாலும் தன் பிள்ளைப் பற்றைத துறக்க அவளால் முடியவில்லை. அகால மரணம் உற்றவர்களுக்கு அந்தியேட்டிக் கருமங்கள் ஆறுமாதங்களுக்குப் பின்னரே செய்யவேண்டும் என்பது விதி. காரணம் அவர்கள் தம் உறவுகளை விட்டுப் பிரியாமல் அச் சூழலில் அலைந்து திரிவார்கள் என்பதே. அப்பெண் பேய் வடிவுடன் ஊரில் உலாவினாள். இடையிடையே அழகிய பெண் போல வந்து, கணவனிடம் தன் குழந்தையைத் தரும்படி கேட்பாள். அவள் குழந்தையின் உயிரைக் குடித்து விடுவாள் என்று அஞ்சிய கணவன் கொடுக்க மறுத்து வந்தான். ஒருநாள் அவள் கெஞ்சியபடி பின்னே நடக்க கணவன் குழந்தையை மார்பில் ஏந்தியபடி முன்னே செல்ல, எழுபது வேளாளர் சமூகத்திடம் வழக்கு உரைக்கப்பட்டது.

அவள் பெண் அல்லள்; பேய் என்று கணவன் வாதிட்டான். வேளாளர் வஞ்சக மனத்துடன் தாயபபாசத்தால் உருகிறவள் போல நடித்தவளின் பேச்சை நம்பினர். கணவனிடம் " நாம பொறுப்பு" நீ தாயிடம் குழந்தையை ஒருமுறை கொடு என்றார்கள். தாய்ப்பேய் வாங்கிய கணமே உயிரைக் 'குடித்துவிட்டு, செத்த பிள்ளையை வீசி விட்டு மறைந்தது. நடுவு நிலைமையில் வழக்குக் கேட்டவர்கள் தம் சொல்லைக்காப்பாற்ற முடியவில்லையே; கணவனுக்குப் பிள்ளையை உயிருடன் கொடுக்கவில்லையே என்று ஏங்கினர்.

"யாகாவார் ஆயினும் நாகக்க" சொன்ன சொல்லைப் பேண முடியாவிட்டால் உயிருடன் இருந்தும் பயன் இல்லை. அவர்கள் எழுபது பேரும் ஈட்டியை நட்டு அதன் மேல் பாய்ந்து தம் உடலைப் பலி கொடுத்தனர். நீதிக்காக சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதற்காக அன்று வாழ்ந்த சாதாரண விவசாயி கூட உயிர் விட்டான். இந்தச் சத்தியம் காக்கும் பண்பு அறுபது வருடங்களுக்கு முன்னர் கூட நம் கிராமப்புறங்களில் குடியிருந்தது "நீ நாக்குப் பிசகி விட்டாய் உன்னோடு எனக்குக் கதையில்லை" என்று சொல்லும் துணிவு படிக்காத கமக்காரர் மத்தியில் கூட நிலவியது. இரண்டாம் உலகப் போரும், கறுப்புச் சந்தையும், பணப்புழக்கமும் ஆட்களை மாற்றத் தொடங்கின. வஞ்சகமற்ற கிராம ஆசிரியர்கள் கூட சங்கக்கடைகளை நடத்தும் நிர்வாக சபைகளில் சேர்ந்த பின் சீனி 'பேர்மிற்' எடுத்து விற்பது போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபடலாயினர். பாலில் நீர் கலக்கும் போக்கும், 15 சதம் விற்ற அரிசியை 3ரூபாவுக்கு விற்பதும் கமக்காரர்களிடம் தோன்றலாயின. இன்று நாட்டை ஆள்பவர் முதல் சந்தையில் சாமான் விற்பவர் வரை பொய்யும் புரட்டும் தான் மனிதன் வாழ வழி என்ற நிச்சயபுத்தி வந்துவிட்டது.

சத்தியத்திற்காக உயிர்விட்ட எழுபது பேரின் பெருமையை திருஞானசம்பந்தர் கூட எடுத்துப் பேசாமல் இருக்க முடியவில்லை என்று மௌன தவமுனிவர் பொ.கைலா சபதி அவர்கள் பாராட்டுவார். கலி ஐயாயிரத்திற்குப் பின் ஏதோ செய்து, சாதிக்கப் போகிறோம் என்று பூமிக்கு வந்திருக்கிறோமே எங்கள் துணிவை மெச்சத் தான் வேண்டும் என்று கேலிக் குரலில் கூறுவாராம்.

*அவை மணி*

# சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா தடையாக இருக்காது

## இந்திய ஊடகவியலாளர் பன்னீர்ச்செல்வம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நடத்தப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா ஒருபோதும் தடையாக இருக்காது என இந்திய ஊடகவியலாளர் எஸ்.பன்னீர்ச்செல்வம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தியா ஒருபோதும் நேரடியாகத் தலையிடாது.

அத்துடன், இந்தியாவில் நடைபெற்று முடிந்த தேர்தல் மூலம் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இருந்தபோதும், இலங்கையின் இனப்பிரச்சினையில நேரடியாக இந்தியா தலையிட்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்படாது எனத் தான் நம்புவதாகவும் அந்த ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

(உ-61,10)

# இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு சகலருக்கும் ஏற்புடையதாய் இருக்க வேண்டும்

## வலியுறுத்துகிறார் நிருபம் சென்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு சமாதானத் தீர்வு ஏற்படவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் தெரிவித்துள்ளார்.

பேராதனையில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இலங்கையிலும் இந்தியாவிலும் அதிகளவு மக்கள் கிராமப் புறங்களிலேயே வசிக்கின்றனர்.

அவர்களது பொருளாதார வளத்தை மேம்படுத்துவதற்கு விவசாய மற்றும் கால்நடைத் துறைகளை அபிவிருத்தி செய்வது அவசியம்.

இவ்யதார்த்த நிலையை உணர்ந்து புதியதொரு பொருளாதாரக்கொள்கையை இரு நாடுகளும் உருவாக்க வேண்டும். உலகமயமாக்கல் காரணமாக புதிய பொருளாதாரக் கொள்கையைஉரு வாக்க முடியாமல இருக்கின்து.



இதனாலேயே உலகமயமாக்கலினால் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் இரு நாடுகளிலும் ஆட்சி மாற்றத்தைக கொண்டு வந்துள்ளனர் என்றார்.

(உ-61,10)

# இராசி பலன்

**16.05.2004**

**(வைகாசி 03, ஞாயிற்றுக்கிழமை)**

**துவாதசி காலை 7.05 மணிவரை**

**ரேவதி பி.ப 3.23மணிவரை**

**இராகுகாலம் 4.23-5.53மணிவரை**

**சுபநேரம் 8.53-10.23 மணிவரை**

***பிரதோசவிரதம்***

**மேடம்**

வெகுமானம், சயனசுகம், பிரயாணம், நல்ல முயற்சி.

**இடபம்**

வீண் அலைச்சல், உறவினர் மனஸ்தாபம், சயனசுகக் குறைவு, சோம்பல் நிலை.

**மிதுனம்**

சிநேகிதர் சந்திப்பு, ஆனந்தம், போசன சுகம், முயற்சி கைகூடும்.

**கடகம்**

புத்தி சாதுரியம், தூரதேசச் செய்தி, போசன நன்மை, தெய்வசிந்தை.

**சிங்கம்**

உடல் நலக்குறைவு, அதிகசெலவு, இடமாற்றம், காரியதாமதம்.

**கன்னி**

மனஸ்தாபம், தெய்வசிந்தை, முயற்சிதாமதம், போசன சுகம்.

**துலாம்**

மனோதைரியம், திடீர் நன்மை, சயன சுகம், குடும்பமகிழ்ச்சி.

**விருச்சிகம்**

தொழில் சிந்தை, புதியமுயற்சி , சுவாரஸ்யம், விருந்துபசாரம்.

**தனுசு**

குடும்பக் கவலை, பணத்தட்டுப்பாடு, கௌரவக் குறைவு, மனச்சஞ்சலம்.

**மகரம்**

தனவிரயம், செல்வாக்குக்குறைவு, காரியதாமதம், ரோகநிலை.

**கும்பம்**

கூட்டுமுயற்சி, நற்கீர்த்தி, மனோதைரியம், போசன நன்மை.

**மீனம்**

மனோசங்கடம், கௌரவக்குறைவு, காரியதாமதம், கோபப்படுதல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

# அமெரிக்க விசா பெறுவதற்கும் கைவிரல் அடையாளம் அவசியம்

(கொழும்பு)

இவவாரத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயம் அறிவித்துளள புதிய திட்டத்தின் படி, அமெரிக்க விசாவிற்கு விண்ணப்பிக்கும் ஒருவர்,தனது கைவிரல் அடையாளத்தையும வழங்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 119 நாடுகளில் அமெரிக்காவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்திற்கு கடந்த காலத்தில் கொழும்பில் பலத்த எதிர்ப்பு கிளம்பியிருந்தது.

ரணில் ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய போன்ற கட்சிகள் ,இத்திட்டத்தை அமெரிககா நடைமுறைப்படுத்த ரணில் அனுமதிக்கக் கூடாது என்று பாரிய ஆர்ப்பாட்டங்களை நடாத்தியுமிருந்தனர்.

அதனால் இத்திட்டம் தற்காலிகமாகப் பின்போடப்படடிருந்தது. தற்போது இத்திட்டத்தை அமெரிக்கத் தூதுவராலயம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளதாக கொழும்பில் அறிவித்துள்ளது.

எனினும் ஆளும்கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும ஜே.வி.பி இது குறித்து எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லையென்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

வருடாந்தம் கிட்டத்தட்ட 12 ஆயிரம் இலங்கையர்கள் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்கிறார்கள் என்று குறிப்பிட்ட அமெரிக்கத் தூதுவர் ஜிப்ஃ.ரி லன்ஸ்ரெட் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளும் 120வது நாடு இலங்கை என்றும் தெரிவித்துள்ளார். (உ)

# இலங்கையில் முதலிட ஆஸி. முதலீட்டாளர்களுக்கு ஊக்கம்

(கொழுமபு)

இலங்கையில் மேலதிக முதலீடுகளைச் செய்வதற்கு அவுஸ்திரேலியாவின் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த முதலீட்டாளர் களுக்கு ஊக்கமளிக்கப்படுமென கொழும்பிலுள்ள அவுஸ்திரேலியத் தூதுவர் டேவிட்ஸ்பைன் உறுதியளித்துள்ளார். தொழில் உறவுகள் அமைச்சர் அதாவுட செனிவிரத் தினவுடன் அவர் சமீபத்தில் நடத்திய சந்திப்பின் போதே இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

உளளூர் தொழில் அதிபர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் பயிற்சி வழஙகுதற்கான நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கென சிட்னி நகரின்உதவியும்பெறப்படவுள்ளது.

இலங்கை இதுவரை பெற்றுள்ள துரித அபிவிருத்தியில் மேலும்முன்னேற்றம் காண்பதற்கான உதவி வழங்குவது பற்றியும் ஆராயப்படுமென்று அவுஸ்திரேலிய உயர்ஸதானிகர் மேலுமதெரிவித்துள்ளார். (உ-61,8)

# விளையாட்டுப் போட்டி

(அளவெட்டி)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிப 2.00 மணிக்கு யா/ கலாநிதி ஆதியாக ராஜா மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.காரைநகர் உதவி அரசாங்க அதிபர் செல்வி. பிரபா கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில்,யாழ். மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வே.சாம்பசிவம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-83)

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அ மைச்சு - குறள்

# வலம்புரி

## இந்தியாவின் புதிய அரசு சமாதானத்திற்கு உதவவேண்டும்

இந்தியப் பொதுத் தேர்தல் புதிய ஆட்சிக்குவழி கோலியுள்ளது. பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சிக்கு விடை கொடுத்த பாரத மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக்கு இடமளித்துள்ளனர். இத்தகைய ஆட்சி மாற்றம் குறித்து இப்பகுதியில் நேற்றைய தினம் பிரஸ்தாபித்திருந்தோம். ஜனநாயக நாடுகளில் குறித்த காலத்திற்கு மேலாக ஒரேகட்சியின் ஆட்சிக்கு மக்கள இடம்தராத நிலைமையை இலங்கை, இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட் டியிருந்தன.

இதேவேளை தமிழகத்தில் செல்வி ஜெயலலிதாவின் அதிகார வெறிக்கும் மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளனர். பாட்டும் நானே பாவமும் நானே என்ற தோரணையில் பொடா சட்டம் என்பதைக் கருவியாகக்கொண்டு தனது அரசியல் வைரிகளான வை. கோபாலசாமி, பழ. நெடுமாறன் போன்றவர்களைச் சிறைகளில் அடைத்து பழிதீர்க்கும் படலத்தை நிறைவேற்றிய செல்வி ஜெயலலிதாவுக்கு, பொறுமையாக இருந்த தமிழக மக்கள் தமக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்படுத்தி நல்லதோர் பாடத்தைப் புகட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வருடக் கணக்கில் வை. கோபாலசாமியை சிறையில் அடைத்து வைத்த செயலானது முதல்வர் ஜெயலலிதாவின் அத்துமீறிய நடவடிக்கை என்பதை அப்போது எவரும் சுட்டிக் காட்டத தவறியிருந்தாலும், இப்போது மக்கள் தகுந்த முறையில் அதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

செல்வி ஜெயலலிதாவிற்குப் பாடம் புகட்டிய தமிழக மக்கள், கலைஞர் கருணாநிதியின் கரத்தை ஓங்க வைத்துள்ளனர். மக்கள் அளித்த வாக்குறுதிகளின் பலத்தைக் கொண்டு கலைஞர் கருணாநிதியும் எழுந்து ஆட நினைப்பாராயின் அதற்கும் மக்கள் தகுந்த பாடம் புகட்ட தயாராகவே இருக்கின்றனர் என்பதை கலைஞர் கருணாநிதியும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

கலைஞர் கருணாநிதியின் ஆட்சிக்காலத்தில் செல்வி ஜெயலலிதா சட்டசபையின் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்த போது, சட்டசபையில் வைத்தே மேலாடைகளைக் களைந்து அநாகரிகமான செயலை கலைஞரின் ஆட்கள் செய்து முடித்தனர்.

திரௌபதியின் துகில் களையப்படுவதைப் பார்த்திருந்த துரியோதனன் தரப்புப் போல் கலைஞர் பார்த்திருந்ததும் பின்னர் தனக்கே இயல்பான இலக்கிய நடையில் பதில் கூறி ஊடகங்களைச் சமாளித்ததும், செல்வி ஜெயலலிதா ஆடை களையப்பட்ட அரைநிர்வாணக் கோலத்தில் ஆளுநர் அலெக்சாண்டரிடம் சென்று முறையிட்டதும் நடந்து முடிந்த சம்பவங்கள்.

அச்சம்பவம் நடைபெற்றதன் பின்னர் கலைஞர் கருணாநிதி தமிழக முதலமைச்சரின் கதிரையில் நிலையாக இருக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. கிடைத்த சந்தர்ப்பத்திலும் ஜெயலலிதா மீது எல்லை கடந்த ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரைச் சிறையிலடைத்தார். இதனால் முதலமைச்சர் கருணாநிதி எனற பதவியை தமிழக மக்கள் இன்று வரை பறிமுதல் செய்துள்ளனர். ஆனால் இப்போது மாற்றம் தெரிகிறது. கலைஞர் கருணா நிதிக்கு மீண்டுமோர் சந்தர்ப்பம் கிடைக்கும் வாய்ப் புண்டு.

எதுவாயினும் கிடைக்கின்ற வாய்ப்பை கலைஞர் கருணாநிதி தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இலங்கை இனவிவகாரத்தில் இந்தியா தேவையற்ற முறையில் தலையிட்டு இனப்பிரச்சினை தீர்வதற்குத் தடையாக இருப்பதை இந்திய மக்கள் விரும்பவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் பாரதீய ஜனதாக்கட்சிக்கு தகுந்த முறையில் புகட்டியுள்ளன.

மக்கள் புகட்டிய பாடம் பாரதீய ஜனதாக்கட்சிக்கு மட்டுமல்ல, அது காங்கிரஸ் கட்சிக்கும் பொருந்தும். இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்பட வேண்டும். பிராந்தியப் பாதுகாப்பு என்ற பேரில் ஈழத்தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்களால் நசுக்கப்படுவதை அனுமதிப்பது இந்திய அரசுக்கு அழகல்ல என்பதால், காங்கிரஸ் அரசு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு-சமாதான முயற்சிகளுக்கு தனது விசுவாசமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இதனை கலைஞர் கருணாநிதி காங்கிரஸிற்கு ஞாபகப்படுத்த வேண்டும்.

## யாழ். மாவட்ட துரித அபி. திட்டத்திற்கான 1.7 பில்லியனை விடுவிப்பதில் இழுத்தடிப்பு

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டத்தை உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய 1.7 பில்லியன் ரூபாவை விடுவிப்பதில் திறைசேரி தொடர்ந்தும அசமந்தப்போக்கை கடைப்பிடித்து வருவதாகத் தெரியவருகிறது.

ஐ.தே. முன்னணி ஆட்சிக்காலத்தில்யாழ். மாவட்டத்தில் உடனடி அபிவிருத்திப் பணிகளை மேற்கொளவதற்கென மதிப்பீடு செய்யப்பட்ட 1.7 பில்லியன் ரூபாவுக்கான உத்தேசத் திட்டம் தயாரிக்கப்பட்டு பிரதமர் ரணிலின் முன்மொழிவும் பெறப்பட்டது.

இப்பணியை இரு கட்டங்களாக அமுல் செய்வதென யாழ். செயலகத்துடன் இணக்கம் காணப்பட்டதற்கமைய முதல் கட்டப் பணிகளுக்கான நிதியும் மதிப்பிடப்பட்டது.

இதில் சமூக அடிப்படைக் கட்டுமாணம் என்ற தலைப்பில் கட்டடம்,தளபாடம் -32 .40 மில்லியன், தொழில்நுட்பப் பயிற்சி-12 மில்லியன், சுகாதாரம்- 165 மில்லியன், மீள்குடியமர்வு ,சமூக அபிவிருத்தி -20 மில்லியன்,பெண்கள் ,குழந்தைகள், வயோதிபர் பராமரிப்பு- 10 மில்லியன், கலாசார சமயஅலுவல்கள்- 25 மில்லியன், பொருளாதார அடிப்படைக் கட்டுமாணம என்ற தலைப்பில் வீதி அபிவிருத்தி -70 மில்லியன், கடல் போக்குவரத்து-20 மில்லியன், நன்னீர் விநியோகம், வடிகாலமைப்பு-10 மில்லியன் வருமான முதலீட்டுத் திட்டம் என்ற தலைப்பில்,

விவசாய அபிவிருத்தி-5 மில்லியன், தென்னைவள அபிவிருத்தி-8.5 மில்லியன், பண்ணை அபிவிருத்தி-7 .40 மில்லியன், மீன்பிடி -2 மில்லியன், பனைவள அபிவிருத்தி-25 மில்லியன், நிறுவன அடிக்கட்டுமாணம் என்ற தலைப்பில்,

உள்ளூராட்சி மன்றம்-102.25 மில்லியன்,கூட்டுறவுத் துறை அபிவிருத்தி- 83.60 மில்லியன் என்ற அடிப்படையில் திட்டம கையளிக்கப்பட்டது.

25.02.2004 இல அமைச்சரவை கூடிய போது இது அங்கீகரிக்கப்பட்டதுடன் 685.30 மில்லியன் ரூபாவை முதல் கட்டப் பணிகளுக்காக ஒதுக்கவும் சிபார்சு செய்யப்பட்டு திறைசேரிக்கும் இது குறித்த பணிப்பு விடுக்கப்பட்டது.

இந்நிலையில் அவ் அரசாங்கம் கலைக்கப்பட்டு தேர்தல் மூலம் புதிய அரசாங்கம் நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற பின்னரும் இந்நிதி வந்து சேரவில்லை.

இது தொடர்பில் யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் கூட்டமைப்பு எம். பிக்களுக்கு தெரியப்படுத்தியதையடுத்து சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. இவ் விடயமாகத் திறைசேரியுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

(உ-43)

## வடக்கு-கிழக்கில் சுகாதார சேவை ஊழியர் சுகவீன லீவுப் போராட்டம்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள சுகாதார சேவை ஊழியர்கள் அனைவரும் எதிர்வரும் 19,20 திகதிகளில் சுகவன விடுமுறை போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனா.

சுகாதாரத் துறையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நீக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலபடுத்துமாறு கோரியே இவ் இருநாள் சுகவீன விடுமுறைப் போராட்டம் நடாத்தப்படவுள்ளது.

திருத்தியமைக்கப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சுகாதார சேவை ஊழியர்களுக்கு சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டபோதிலும் வடக்கு-கிழக்கில் உள்ளவர்களுக்கு இது வரை அவ்வுயர்வுகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-18)

## படையினர் -மீனவர் சந்திப்பு இணக்கப்பாடு ஏதுமின்றி நிறைவு

(திருநெல்வேலி)

வடமராட்சி மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து முக்கிய முடிவுகளை எடுக்கும் மாநாடொன்று கடந்த வெள்ளியன்று 524 படைத்தலைமையகத்தில் இடம் பெற்றது.

இதில் கண்காணிப்புக் குழுவின் கடற்பகுதிப் பொறுப்பாளர் எரிக் மற்றும் வோல்ட் ஆகியோரும் 524 படைத்தளபதி கேணல் ரத்னாயக்க, கடற்படை அதிகாரி ஜேஜே, கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் பங்கேற்றனர்.

இதன்போது உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி தம்மை சுதந்திரமாக மீன்பிடிக்க உதவிடுமாறு மீனவர்கள் தரப்பில் விடுத்த கோரிக்கையை படைத்தரப்பினர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அத்துடன் பருத்தித்துறை முனைப்பகுதியில் கடற்படையின் படகு மோதி மீனவர் ஒருவர் மரணமான சம்பவம் தொடர்பில் பிரஸ்தாபித்த போது இது விடயத்தில் ,

கடற்படையினர் தொடர்புட வில்லை என படையினர் முற்றாக மறுத்துள்ளனர்.

இதேவேளை, இவ்வாறான உயர்மட்ட மாநாடுகளை இனி மேல் படைமுகாம்களுக்கும் நடாத்த தாம் அனுமதிக்கப்போவதில்லை என மீனவர்கள் கண்காணிப்புக்குழுவிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(உ-43)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நன்மை செய்யவேண்டும் என்பதற்காக நம்மில் எத்தனை பேர் காரியங்கள் செய்கிறோம்? மிகவும் குறைவு. அவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். பிறர் நன்மை செய்கிறார்கள். ஆனால் அது வற்புறுத்தலின் காரணமாக நாம் எங்கும் நிற்க முடியாது. அடியும் உதையும் பட்டு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டவாறே முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நாம் என்ன செய்ய முடியும்? உலகமும் அப்படியே தான் இருக்கும். பூமியும் அப்படியே தான் இருக்கும். அது நீலத்திலிருந்து பழுப்பாக மாறும். பழுப்பிலிருந்து நீலமாகும் அவ்வளவு தான்.

சுவாமி விவேகானந்தர்

## சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கல்வித் தகைமைகள் பரிசீலணை

(கொழும்பு)

18ஆயிரத்து 860 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகளை சமுர்த்தி அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

நாடு முழுவதிலும் வேலையாற்றி வருகின்ற 24 ஆயிரத்து 867சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 18 ஆயிரத்து 860பேர் இன்னமும் சேவையில் நிரந்தரமாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏற்கனவே400 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொய்யான கல்வித்தகைமைகளை சமர்ப்பித்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து மேற்படி 18 ஆயிரத்து 860 பேரினதும் கல்வித்தகைமைகளும் தறபோது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

உரிய கல்வித் தகைமைகளைக் கொண்டிராத சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகர்த்தர்கள் அச்சேவையில் இரண்டாம் தரத்திற்குப் பதவி இறக்கப்படவுள்ளனர்.

(உ)

## சுகாதார உபசேவையில் உள்ள வெற்றிடங்கள் உடன் நிரப்பப்படும்

(கொழும்பு)

சுகாதரா உபசேவைகளில் உள்ள 500 வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கபட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்திற்குள் இந்த வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தாம் பணித்துள்ளதாகவும் தெரிவித்த அவர்,

க.பொ. த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடங்களில் ஆகக் கூடுதல் புள்ளிகளைப்பெற்றவர்களே இந்த வெற்றிடங்களுக்கு நிரப்பப்படவுள்ளனர் என்றும்,

கடந்த வருடம் ஜுன் மாதம் வெளியான வர்ததமானியில் சுகாதார உபசேவைகளுக்கென அறிவிக்கப்படட வெற்றிடங்கள் தொடர்பான விண்ணப்பங்களை அனுப்பி வைததவர்கள் மத்தியில் இருந்து இந் நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, மருந்தகவியலாளர்கள், வானொலி தொழில்நுட்பவியளார்கள் ,ஆய்வுகூட தொழில்நுட்டவியலாளர்கள் ஆகியோர் சுகாதார உபசேவைகளில் உள்ளடங்கு கின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-61,10)

## புனர்வாழ்வு அமைச்சின் பணிப்பாளராக ஹரீம் பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரான ஹரீம் பீரிஸ், புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் நேரடிப் பொறுப்பின் கழ உள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சு, வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு என்பனவற்றின் மூலம் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கவும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தவும் துரித நடவடிக்கை எடுக்கப்படவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க பல்கலைக்கழக வர்த்தக நிர்வாகத்துறை முதுமாணிப் பட்டதாரியான ஹரீம் பீரிஸ் நிதித்துறைப் பட்டதாரியுமாவார்.

(உ)

## வட-கிழக்கில் 5ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுமார் 5ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாக மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.முருகுப்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி,அம்பாறை ஆகிய 8மாவட்டங்களின் 24 கல்வி வலயங்களிலும் உள்ள 2ஆயிரத்து 5 பாடசாலைகளில் இவ் ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுகின்றன.

ஆகக் கூடுதலான 46 சதவீத ஆசிரியர் பற்றாக்குறை வனனிப் பிரதேசத்திலும் 30சதவீத வெற்றிடம் கல்முனை கல்குடா வலயத்திலும் தலா 30 சதவீத வெற்றிடம் கந்தளாய், மூதூர் வலயங்களிலும் நிலவுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

## குமுதினிப் படகு பயணிகள் படுகொலை நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு

(நெடுந்தீவு)

1985ஆம் ஆண்டு மேமாதம் 15ஆம்திகதி நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி பயணித்த குமுதினிப் படகில் இருந்த பயணிகளில் 36 பேரை இலங்கைக் கடற்படையினர் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்தனர்.

இப்படுகொலை நடவடிக்கையில உயிரிழந்த 36 பேரின் நினைவாக நெடுந்தீவுக் கடலில் சிறப்பாக அமைக்கப்பட்ட மிதக்கும் மேடையில் நேற்றுக் காலை 10 மணிக்கு சுடர்கள் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து நினைவு நிகழ்சிகள் நெடுந்தீவு மாவலி துறைமுகப்பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் நடைபெற்றன.

முன்னதாக நெடுந்தீவு தீவியர் பள்ளம் பகுதியிலிருந்து பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், பொது மக்கள் அனைவரும் பேரணியாகப் புறப்பட்டு நினைவுத் தூபியை வந்தடைந்தனர்.

இப் பேரணியைத் தொடர்ந்து படுகொலைச் சித்திரிக்கும் ஊர்திப்பவனியும் நகர்ந்தது.

இதேவேளை நெடுந்தீவின் அனைத்துப் பகுதிகளிலும் நேற்றுக் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் முக்கிய இடங்களில் சோக இசையும் ஒலிக்கவிடப்பட்டிருந்தது.

நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நெடுந்தீவுப் பொது அமைப்புக்கள் மேற்கொண்ட நேற்றை நினைவு நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு நினைவுரைகளையாற்றினர். நேற்றுப் பிற்பகல் 2 மணிவரை நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன. ஆயிரக் கணக்கான பொது மக்கள் உணர்வு பூர்வமாக நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-121)

## வெளிநோயாளர் பிரிவின் கதிரைகளை ஆக்கிரமிக்கும் இளவயது காதல் ஜோடிகள்

(இணுவில்)

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் பல இளவயதுக் காதல் ஜோடிகளை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக ஆஸ்பத்திரிக்கு வருகை தரும் இவர்கள் அங்குள்ள கதிரைகளில் வரிசையாக நோயாளிகளுடன் தாமும் நோயாளிகளே போல கைகளில் கொப்பியுடன் இருந்து கதைத்துக் கொண்டு இருப்பதனைக் காணக்கூடியதாகவும் பின்னர் அவர்கள் வைத்தியரை நாடாமல் வீடு திரும்புவதையும் அவதானிக்க முடிகின்றது.

இச்செயற்பாடு காரணமாக வைத்திய தேவைக்காக வரும் வயோதிபர்கள், பெண்கள் எனப் பலரும் நீண்ட நேரம் வரிசையாக நின்று தமது மருந்துகளைப் பெறவேண்டியுள்ளது.

சிலநேரங்களில் வயோதிபர்களுக்கும் இந்த ஜோடிகளுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்படுவதையும் பிறர் சமாதானப்படுத்துவதையும் காண முடிகின்றது. (உ-122)

## 100வது அகவை நிறைவு விழா

(பொன்னாலை)

யாழ்ப்பாணம் சைவவித்தியா விருத்திச் சங்கம் நடாத்தும் அமரர் எஸ். ஆர். கனகநாயகத்தின் 100ஆவது அகவை நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சிறப்புரைகளை இளைப்பாறிய அரச அதிபர் எஸ். சிவஞானம், யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், சைவ வித்தியா விருத்திச் சங்க முன்னாள் தலைவர் பேராசிரியர் ச.வை. பரமேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இதில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-49)

## விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டுவரும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவிக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியன ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இப்பதவிக்கு விண்ணப்பித்த வடக்குக் கிழக்கு மாகாணத்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொது ஜன ஐக்கிய முன்னணி ஆடசிக் காலத்தில், அதாவது 2001 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் விவசாய அமைச்சினால் வழங்கப்படவிருந்த இந் நியமனங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இருப்பினும், அவ்வரசு கலைக்கப்பட்டதனால் இந் நியமனங்களை வழங்க முடியாமல் போனது.

தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு 2002 டிசம்பர் 28இல் மீண்டும் இதற்கான விண்ணப்பங்களைக் கோரி 2004 ஜனவரி 20ஆம் திகதி நேர்முகத் தேர்வை நடாத்தியது.

இதற்கிணங்க வடக்குக் கிழக்கைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு இந் நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும் வடக்குக் கிழக்கில் இருந்து நேர்முகத் தேர்விற்குத் தோற்றியோர் இந் நியமன விவகாரத்தில் தொடர் இழுத்தடிப்புக்கு ஆளாகி வருகின்றனர்.

மூன்றாண்டுகளுக்கு மேல் ஏமாற்றப்பட்டுவந்த இவர்களை புதிய அரசாவது கவனிக்க வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

## புதிய அரசியல் கட்சி உதயம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இரட்டை இலைச் சின்னத்தில் புதிய அரசியல் கட்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயாநந்ததிஸ்ஸநாயக்காவினால் இந்தப் புதிய கட்சிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை முன்னெடுக்கும் வகையில் இந்தக் கட்சி பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதுடன் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்தும் ஆராய்ந்து வருகின்றது.(த-18)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மருத்துவ உபகரணங்களை அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் வவுனியாக் கச்சேரியில் வைத்து நேற்று வழங்கியது. இதனை ஒப்பிறேசன் யூ.எஸ்.ஏ நிறுவனம் வழங்கியிருந்தது.

இந்நிகழ்வுக்கு வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தலைமை தாங்கினார். தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கேபி ரெஜி தமிழர் புனர்வாழவுக்கழக சுகாதார வேலைத்திட்டப் பொறுப்பாளர்களான மாக்கிரட், யூலியா, சந்துரு, பரராஜசிங்கம் மற்றும் முல்லைத்தீவு, மன்னார், அம்பாறை மாவட்ட அரச அதிபர்கள், வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி. கிஷோர், செல்வம் அடைக்கலநாதன், லோகநாதலிங்கம், வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஞானவேல், வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் திரு ஞானசம்பந்தமூர்த்தி, யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் ஜெயராஜா, மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்ட இணைப்பாளர் ஆ. தெய்வநாயகம் போன்றோர் கலந்து கொண்டனர்.

ஒப்பிரேசன் யூ.எஸ்.ஏ நிறுவனம் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் வடகிழக்கு மாகாணங்களில் ஆய்வு செய்த பின்னரே மருத்துவ உபகரணங்களைக் கையளித்திருக்கிறது.

இந்த செயற்றிட்டம் தொடர்ந்து 3மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறவுள்ளதாகவும், தங்கள் பகுதிக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள பற்றிய விபரங்களை அறிவிக்கும் படியும் தமிழர் புனர்வாழ்வுக கழக நிறை வேற்றுப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

9-11மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவப் பொருட்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டதுடன் மன்னார் மாவட்டத்துக்கு ஈ.சி.ஜி இயந்திரமும் கையளிக்கப்பட்டது. (த)

## இந்தியாவின் புதிய...

கிறது.ஜனாதிபதியின் அழைப்பு வந்ததும் நாளை சோனியா பிரதமராகப் பதவியேற்பார் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் இது அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்படவில்லை.

இன்றும் நாளையும் காங்கிரஸ் கூட்டணி, இடதுசாரிக் கட்சிகள், மதசார்பற்ற கட்சிகள் கூட்டம் நடைபெறுகிறது. இதில் புதிய அரசுஅமைப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

இதற்கிடையே டெல்லியில் வெளியான மற்றொரு தகவல்படி கூட்டணி கட்சிகளின் ஆதரவை முறைப்படி பெற்ற பிறகே சோனியா ஜனாதிபதி அப்துல்கலாமைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோருவார் என்று தெரியவந்துள்ளது. (த

## இந்தியாவின்...

வழி பிறப்பதற்கு இடமுண்டு என்றே நான் கருதுகிறேன்.இலங்கையின் இனப்பிரச்சினை சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமிருக்காது போனாலும் ஒட்டுமொத்தமாக இந்தியா எமக்குப் பாதகமாக செயற்பட மாட்டாது என்று எண்ணுகிறேன் என சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (ம)

## ஜப்பான்...

இதேவேளை நேற்று மாலை கொழும்பு வந்து சேர்ந்த தூதுவர் அகாஷி இன்று ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-த)

## தாயும் மகளும் தாக்கப்பட்டனர்

(கொழும்புத்துறை)

வீதியில் போடப்பட்டிருந்த கட்டடப் பொருட்களை அகற்றுமாறு கோரியதால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் அடிதடியில் முடிந்தது.

சம்பவத்தில் தாயும் மகளும் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்புத்துறை மூன்றாம் ஒழுங்கைப் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் எஸ்.பேபி, ஜென்சி இருவருமே காயமடைந்தவர்களாவர். வீதியில் போடப்பட்டிருந்த கட்டப்பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாநகர சபைக்கு முறையீடு செய்யப்பட்டதாகவும் இதனால் உரிமையாளர் ஆத்திரமடைந்து பிரஸ்தாபப் பெண்களைத் தாக்கியதாகவும்கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (த-51)

## இலங்கையின்...

உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகின்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பாட்டாளி மக்கள் ஆட்சி என்பனவும் இணைந்திருப்பதால் கூட்டணி தமிழ் நாட்டில் அமோக வெற்றியை பெற்றுள்ளது.

இந் நிலையில் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பிரதான கூட்டுக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தை சோனியா பங்காளிக் கட்சியாக ஏற்று கலைஞர் கருணாநிதிக்கு துணைப் பிரதமர் பதவியை வழங்க முன்வந்துள்ள நிலையில் இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாகக் கருணாநிதியின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும்பிரதமர் பதவியை ஏற்கவுள்ள சோனியா காந்தி ஏற்பார் என்ற நிலையிலேயே மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனால் இவ் வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை மத்திய அரசியல் பங்கேற்பது தொடர்பாகவும், அமையப் போகும் அரசு தொடர்பாகவும் விவாதிப்பதற்காக தி.மு.க. தலைவர் கருணாநிதி இன்று புதுடில்லி பயணமாகவுள்ளார்.

கருணாநிதி புதுடில்லி செல்வதற்கு முன்னதாகவே சந்திரசேகரன் அவரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவி ஏற்ற பின் நோர்வேயின் அனுசரணையுடன் முதற் கட்டமாக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற் கொண்டு வரும் நிலையில், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனின் இம் முயற்சி இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகளில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-61,8)

## அரியநேந்திரன்...

இவர் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் 18ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பாக தேசியப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் தமது பதவியை இராஜினாமாச் செய்திருந்தனர்.

இதனையடுத்து இவர்கள் மூவரும் எதிர்வரும் 18ஆம் திகதி பாராளுமன்றக் கூட்டத் தொடரின் போது சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேசியப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட ஜனதாஸ பீரிஸ், டி.சி.விஜயசேகர, மேரிலூசிடா, ஆகியோர் தமது பதவியை இராஜினாமாச் செய்திருக்கின்றனர். இவர்களது இடத்திற்கு முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, விஜயதாஸா ராஜபக்ஷ, மேர்வின் சில்வா ஆகியோர் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்.(த-121)

## கிறிஸ்டினா றொக்கா...

கோணமலைக்கு விஜயம் செய்து திருகோணமலை கஸ்தூரி கிராமத்தில் வைத்து நான்கு அதிவேக மீன்பிடிப் படகுகளையும் மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் வழங்கினார்.

இத்த வைபவத்தில் கிறிஸ்டினா றொக்கவுடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லம்ஸ்டர் மற்றும் தெற்காசிய விவகாரத் துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அமெரிகக் இராஜங்கா உதவிச் செயலாளர் திருமதி கிறிஸ்டினா றொக்கா திருகோணமலை அரசாங்க அதிபர் காமினி றொட்டிக்கோவையும சந்தித்து உரையாடியதுடன் திருகோணமலையில் செயற்பட்டுவரும் அமெரிக்க உதவி நிறுவனமான யு.எஸ். எயிட் அமைப்பின் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளதுடன் செயற்பாடுகளையும் நேரில் சென்று பார்வையிட்டார். (ம)

வலம்புரியின் வாரமலர் விலை : 16.00
சங்கு நாதம்
Sankunatham
சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி 2223378 நாதம் :10

சமாதானத்தை எதிர்க்க யாராலுமே முடியாது
-விதுரன்
நிரந்தரத் தீர்வு பற்றிய பேச்சு உடனடிச் சாத்தியமா?
-டொறிங்ரன்
சவால்களை எதிர் கொண்டு சாதனை படைத்த முரளி
-நோயல்
வியாசர் பதில்கள், சினிமாச் சிதறல், சிறுகதை
மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்
வெள்ளிக்கிழமையில் உங்கள் உள்ளங்களில் சங்கு நாதம்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.